## தமிழ்நாடு அரசு

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

## மானியக் கோரிக்கை எண். 21

## நிதிநிலை செயலாக்கம்

## 2018-2019

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் 2018-2019 ஆம் ஆண்டிற்கான செயல்பாடு

# I நெடுஞ்சாலைத்துறை

## 1. முன்னுரை

சாலை உள்கட்டமைப்பின் மேம்பாடானது மாநிலத்தின் அனைத்து பகுதிகளையும் நன்கு இணைத்து, பாதுகாப்பான பயணத்திற்கு உதவுவதுடன், சமூக-பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிக்கிறது. சாலை உள்கட்டமைப்பு சமூகத்தின் அனைத்துப்பகுதிகளின் சமநிலை வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைகிறது மற்றும் அண்டை மாநிலங்களுடனான இணைப்பு வர்த்தக மற்றும் தகவல் பரிமாற்ற வளர்ச்சிக்கு உதவுகிறது.

சாலைகளின் கட்டுமானம் மட்டுமின்றி அவற்றின் உரிய நேர பராமரிப்பு, அவை நீண்ட ஆயுட்காலத்துடன் நிலைத்து நிற்க வழிகோலுகிறது. சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல், பாலங்கள், பல்வழிச்சாலை மேம்பாலங்கள், உயர்மட்ட பாலங்கள் கட்டுதல், புறவழிச்சாலைகள் அமைத்தல் போன்ற பணிகளை நெடுஞ்சாலைத்துறை மேற்கொண்டு வருகிறது..

துறையின் 2018-2019 ஆம் ஆண்டிற்கான நிதி மற்றும் செயல்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### 1.1. நெடுஞ்சாலைத் துறை மூலம் பராமரிக்கப்படும் சொத்துக்கள்

நெடுஞ்சாலைத்துறை 66,039 கி.மீ. அரசு சாலைகளைப் பராமரித்து வருகிறது. சாலைகளின் வகைப்பாடு மற்றும் நீளம் மற்றும் பாலங்களின் விவரங்கள் முறையே அட்டவணை 1 மற்றும் அட்டவணை 2-ல் விவரிக்கப்பட்டுள்ளது. அரசு சாலைகளின் மேற்தளப்பரப்பு மற்றும் வழித்தடம் வாரியாக உள்ள நீளம் முறையே அட்டவணை 3 மற்றும் அட்டவணை 4-ல் விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1: சாலைகளின் வகைப்பாடு**

(நீளம் கி.மீ.-ல்)

| வ. எண் | வகைப்பாடுகள் | | நீளம் |
|---|---|---|---|
| 1 | தேசிய நெடுஞ்சாலைகள் (தே.நெ) | தேசிய நெடுஞ்சாலை அலகு | 1900 |
| | | இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் | 4734 |
| | | **தே.நெ. மொத்தம்** | **6634** |
| 2 | மாநில நெடுஞ்சாலைகள் (மா.நெ) | | 11169 |
| 3 | மாவட்ட முக்கிய சாலைகள் (மா.மு.சா) | | 11612 |
| 4 | மாவட்ட இதர சாலைகள் (மா.இ.சா) | | 36624 |
| | **சாலைகளின் மொத்த நீளம் (தே.நெ. தவிர)** | | **59405** |
| | **ஒட்டு மொத்தம்** | | **66039** |

**அட்டவணை 2 : பாலங்களின் வகைகள் மற்றும் அவற்றின் எண்ணிக்கை**

| பாலங்களின் வகைகள் | எண்ணிக்கை |
|---|---|
| பெரிய பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள்* | 8973 |
| மிகச் சிறு பாலங்கள் | 122583 |
| இருப்புப்பாதை கடவுகளில் உள்ள இரயில்வே மேம்பாலங்கள் | 133 |
| இருப்புப்பாதை கடவுகளில் உள்ள இரயில்வே கீழ்பாலங்கள் | 57 |
| பாதசாரிகள் சுரங்கப்பாதை | 14 |
| **மொத்தம்** | **131760** |

* பாலங்களில் 6 - 60 மீ. மற்றும் 60 மீ. க்கு மேல் நீர்வழிப்பாதை உள்ளவை அடங்கலாக

**அட்டவணை 3: மேற்தளப் பரப்பு வாரியாக நீளம்**

(நீளம் கி.மீ.-ல்)

| வ. எண் | வகைப்பாடு | சிமெண்ட் கற்கலவைத் தளம் | தார்த் தளம் | கப்பித் தளம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தேசிய நெடுஞ்சாலைகள் | 2 | 6632 | - | 6634 |
| 2 | மாநில நெடுஞ்சாலைகள் | 23 | 11146 | - | 11169 |
| 3 | மாவட்ட முக்கிய சாலைகள் | 32 | 11580 | - | 11612 |
| 4 | மாவட்ட இதர சாலைகள் | 108 | 36516 | - | 36624 |
| **மொத்தம்** | | **165** | **65874** | - | **66039** |

## அட்டவணை 4: அரசு சாலைகளின் வழித்தடம் வாரியாக நீளம்

(நீளம் கி.மீ.-ல்)

| வ. எண் | வகைப்பாடு | ஒரு வழித் தடம் | இடை வழித் தடம் | இரு வழித் தடம் | பல வழித் தடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | தேசிய நெடுஞ்சாலைகள் | | | | | |
| | அ) தேசிய நெடுஞ்சாலை அலகின் கட்டுப்பாட்டின்கீழ் | - | - | 1608 | 292 | 1900 |
| | ஆ) தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டின்கீழ் | - | - | 1906 | 2828 | 4734 |
| | **மொத்தம்** | **-** | **-** | **3514** | **3120** | **6634** |
| | வழித்தடத்தின் விழுக்காடு | - | - | 53% | 47% | |
| 2 | **மாநில நெடுஞ்சாலைகள்** | **38** | **215** | **8570** | **2346** | **11169** |
| | வழித்தடத்தின் விழுக்காடு | 0% | 2% | 77% | 21% | |
| 3 | **மாவட்ட முக்கிய சாலைகள்** | **321** | **7186** | **3869** | **236** | **11612** |
| | வழித்தடத்தின் விழுக்காடு | 3% | 62% | 33% | 2% | |
| 4 | **மாவட்ட இதர சாலைகள்** | **30490** | **4960** | **1103** | **71** | **36624** |
| | வழித்தடத்தின் விழுக்காடு | 83% | 14% | 3% | 0% | |
| | **மொத்தம்** | **30849** | **12361** | **17056** | **5773** | **66039** |
| | **சாலைகளின் மொத்த நீளத்தில் வழித்தடத்தின் விழுக்காடு** | **46%** | **19%** | **26%** | **9%** | |

## 1.2. திட்டங்களின் செயல்பாடு

### *1.2.1. நிதி செயல்பாடு*

2018-19 ஆம் ஆண்டிற்கான திட்டப் பணிகளின் நிதி நிலை செயலாக்கம், மற்றும் 2019-20 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு **அட்டவணை 5** இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 5: நிதி ஒதுக்கீடும் செலவும்**

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின்பெயர் | வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2019-20 |
|---|---|---|---|---|
| | | 2018-19 | | |
| | **கட்டுமானம் மற்றும் பராமரிப்பு** | | | |
| | **மாநில நெடுஞ்சாலைகள்** | | | |
| 1 | பாலங்கள் (பகுதி II திட்டம்) | 1188.92 | 1214.52 | 1188.93 |
| 2 | சாலைகள் (பகுதி II திட்டம்) | 0.05 | 0.02 | 0.02 |
| | **மொத்தம்** | **1188.97** | **1214.54** | **1188.95** |
| | **மாவட்ட முக்கிய சாலைகள்** | | | |
| 3 | மாவட்ட முக்கிய சாலைகள் (பகுதி II திட்டம்) | 0.00 | 0.00 | 0.01 |
| | **மொத்தம்** | **0.00** | **0.00** | **0.01** |
| | **மாவட்ட இதர சாலைகள்** | | | |
| 4 | மாவட்ட இதர சாலைகள் (பகுதி II திட்டம்) | 0.01 | 27.07 | 0.02 |
| | **மொத்தம்** | **0.01** | **27.07** | **0.02** |
| | **ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்** | | | |
| 5 | சி.ஆர்.ஐ.டி.பி.-மாநில நெடுஞ்சாலைகள் | 124948.00 | 124492.78 | 132218.00 |
| 6 | சி.ஆர்.ஐ.டி.பி.-மாவட்ட முக்கிய சாலைகள் | 61787.00 | 61728.37 | 70742.30 |
| 7 | சி.ஆர்.ஐ.டி.பி.-மாவட்ட இதர சாலைகள் | 99484.00 | 119345.64 | 141304.70 |
| 8 | சி.ஆர்.ஐ.டி.பி - மாவட்ட இதர சாலைகள் (சிறப்புக் கூறு திட்டம்) | 26196.00 | 25680.38 | 20000.00 |
| | **மொத்தம்** | **312415.00** | **331247.17** | **364265.00** |
| 9 | சி.ஆர்.ஐ.டி.பி. - சாலையின் ஓடுதளத்தை மேம்படுத்துதல் | 40000.00 | 58778.69 | 40000.00 |

| வ. எண் | திட்டத்தின்பெயர் | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2018-19 | செலவினம் 2018-19 | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2019-20 |
|---|---|---|---|---|
| 10 | சி.ஆர்.ஐ.டி.பி - பி.பி.எம்.சி விருதுநகர் | 27585.00 | 14108.25 | 52778.00 |
| 11 | சென்னை ஆரச் சாலைகள் மேம்பாடுத் திட்டம் | 0.01 | 667.19 | 0.01 |
| 12 | புறவழிச் சாலைகளுக்கு நிலம் கையகப்படுத்துதல் | | | |
| | (அ) பணிகள் | 0.00 | 0.00 | 0.00 |
| | (ஆ) நிலம் | 17571.08 | 9627.61 | 13268.64 |
| | **மொத்தம்** | **17571.08** | **9627.61** | **13268.64** |
| 13 | புறவழிச் சாலைகளுக்கு நிலம் கையகப்படுத்துதல் - KC | | | |
| | (அ) பணிகள் | 14129.04 | 4705.98 | 6829.01 |
| | (ஆ) நிலம் | 19541.01 | 432.25 | 34926.92 |
| | **மொத்தம்** | **33670.05** | **5138.23** | **41755.93** |
| 14 | தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக தொழிற்சாலை பகுதிகளின் சாலைகளை மேம்பாடு செய்தல் | | | |
| | (அ) பணிகள் | 13224.01 | 3000.00 | 10161.03 |
| | (ஆ) நிலம் | 3530.01 | 0.00 | 3529.00 |
| | **மொத்தம்** | **16754.02** | **3000.00** | **13690.03** |
| 15 | ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் உதவியுடன் சென்னை எல்லைச்சாலை அமைத்தல் (CPRR) | 0.00 | 0.00 | 66000.00 |
| 16 | மதுரை சாலையை நான்கு வழித்தடமாக அகலப்படுத்துதல் - தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் | 5000.00 | 6790.00 | 1859.71 |
| 17 | சென்னை வெளிவட்டச் சாலை - (கட்டம் I) | 15216.04 | 15184.02 | 12968.12 |
| 18 | சென்னை வெளிவட்டச் சாலை – (கட்டம் II) | | | |
| | (அ) பணிகள் | 26818.24 | 25902.93 | 23670.00 |
| | (ஆ) நிலம் | 0.00 | 0.00 | 2500.00 |
| | **மொத்தம்** | **26818.24** | **25902.93** | **26170.00** |

| வ. எண் | திட்டத்தின்பெயர் | வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2019-20 |
|---|---|---|---|---|
| | | 2018-19 | | |
| 19 | கட்டிடங்கள் கட்டுதல் | 0.10 | 0.00 | 590.08 |
| 20 | சென்னை மாநகரில் உள்ள தகவல் தொழில்நுட்ப நெடுஞ்சாலை மேம்பாட்டு பணி | 0.01 | 0.00 | 0.01 |
| 21 | மாநில உள் கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியிலிருந்து தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) நெடுஞ்சாலைத்துறை அவர்களால் செயல்படுத்தப்படும் திட்டம் | 393.00 | 3917.23 | 6278.80 |
| 22 | சாலை பாதுகாப்பிற்கான சிறப்புத் திட்டம் | 10000.00 | 9523.45 | 10000.00 |
| 23 | தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டத்தின் செயலாக்கத்தில் கிழக்கு கடற்கரை சாலையில் பாலாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் | 0.01 | 0.00 | 0.00 |
| 24 | வடக்கு துறைமுக அணுகு சாலை | | | |
| | (அ) பணிகள் | 60.00 | 60.00 | 25.00 |
| | (ஆ) நிலம் | 20000.00 | 10000.00 | 20000.00 |
| | **மொத்தம்** | **20060.00** | **10060.00** | **20025.00** |
| 25 | JICA நிதி உதவியுடன் - TNIPP கட்டம் 2 இல் இராஜீவ் காந்தி சாலையில் கேளம்பாக்கம் மற்றும் திருப்போரூர் புறவழிச்சாலைகள் | 10000.00 | 7500.00 | 10370.00 |
| 26 | தலைமைப் பொறியாளர்கள் வீட்டு வசதி (குடியிருப்புகள்) | 0.01 | 0.00 | 0.01 |
| 27 | மாநகர சாலைப் போக்குவரத்து மேம்பாட்டுப் பணிகள் | 3872.83 | 723.34 | 4817.82 |
| 28 | உயர் செறிவு உடைய சாலைகள் | 4207.87 | 2009.08 | 1892.62 |
| 29 | சேலம் சந்திப்பு - ஏற்காடு சாலையில் மேம்பாலம் கட்டுதல் | 21724.21 | 15920.26 | 2235.78 |

| வ. எண் | திட்டத்தின்பெயர் | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2018-19 | செலவினம் 2018-19 | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2019-20 |
|---|---|---|---|---|
| 30 | புதுவாயல் - பழவேற்காடு சாலையை இடைவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல் (TNIPP - II) | 2500.00 | 1372.97 | 2578.74 |
| 31 | ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் சென்னை - கன்னியாகுமரி தொழிற்தடம் | | | |
| | (அ) பணிகள் | 5000.00 | 1186.91 | 30000.00 |
| | (ஆ) நிலம் | 7500.00 | 0.00 | 50000.00 |
| | **மொத்தம்** | **12500.00** | **1186.91** | **80000.00** |
| | **மொத்தம்** | **581476.46** | **523898.94** | **772733.28** |
| 32 | சுனாமி மறுவாழ்வுத் திட்டம் (மத்திய அரசு உதவியுடன்) | 0.01 | 0.00 | 0.01 |
| | **மொத்தம்** | **581476.47** | **523898.94** | **772733.29** |
| | **நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்** | | | |
| 33 | நெடுஞ்சாலை ஆராய்ச்சி மற்றும் மேலாண்மை நிலையம் JD | 0.01 | 0.00 | 0.00 |
| 34 | மாவட்ட இதர சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் ஓடு தள மேற்பரப்பு நிலை குறித்த தகவல்கள் சேகரிப்பதற்கான உபகரணங்கள் பொருத்தப்பட்ட வாகனத்தினை இயக்குதல் மற்றும் பராமரித்தல் JF | 5.40 | 3.29 | 6.10 |
| 35 | தமிழ்நாடு மாநில புத்தாக்க முன் முயற்சி நிதிகள் (TANII) 2016-17 JG | 11.00 | 11.00 | 12.00 |
| 36 | தமிழ்நாடு மாநில புத்தாக்க முன் முயற்சி நிதிகள் (TANII) 2017-18 JI மற்றும் JK | 235.00 | 156.48 | 83.00 |
| 37 | தமிழ்நாடு மாநில புத்தாக்க முன் முயற்சி நிதிகள் (TANII) 2018-19 JL | 4.00 | 4.00 | 0.00 |

| வ. எண் | திட்டத்தின்பெயர் | வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2019-20 |
|---|---|---|---|---|
| | | 2018-19 | | |
| 38 | மேம்பட்ட தரவு சேகரிப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்ட வாகனங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் JM | 24.87 | 12.15 | 19.81 |
| | **மொத்தம்** | **280.28** | **186.92** | **120.91** |
| | **நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகு** | | | |
| 39 | நபார்டு வங்கி கடனுதவியுடன் செயல்படுத்தப்படும் மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் மேம்பாடு - JK | 198.01 | 32.05 | 0.12 |
| 40 | அரசு சாலைகளில் பாலங்கள் கட்டுதல் – JX | 0.01 | 84.99 | 0.01 |
| 41 | அரசு சாலை மற்றும் கிராமச்சாலைகளில் பாலங்கள் கட்டுதல் - JZ | 25000.01 | 11510.74 | 29960.01 |
| 42 | கிராமச்சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் - JI | 27.31 | 0.00 | 0.02 |
| 43 | பேருந்து வழித்தட சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் - JJ | 0.02 | 0.00 | 0.02 |
| 44 | ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுத் திட்டம் - JA | 0.02 | 0.00 | 0.02 |
| 45 | ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவிடன் செயல்படுத்தப்படும் சுனாமி அவசர கால உதவித் திட்டம் - RN | 0.01 | 1.57 | 0.01 |
| 46 | புறவழிச்சாலைகள் (நில எடுப்பு) - KA | 3052.00 | 1661.13 | 1132.00 |
| 47 | **மாநில நிதியின் கீழ்** ஊராட்சி ஒன்றிய சாலைகள் / ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல் - KD | 47500.00 | 43699.53 | 105000.00 |

| வ. எண் | திட்டத்தின்பெயர் | வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2019-20 |
|---|---|---|---|---|
| | | 2018-19 | | |
| 48 | நபார்டு வங்கி கடனுதவியுடன் ஊராட்சி ஒன்றிய சாலைகள் / ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல் - KE | 20000.00 | 0.00 | 0.01 |
| | **மொத்தம்** | **95777.39** | **56990.01** | **136092.22** |
| | **திட்டங்கள்அலகு** | | | |
| 49 | தற்போதுள்ள இருப்புப் பாதை கடவுகளுக்கு பதிலாக மேம்பாலங்களும் சுரங்கப் பாதைகளும் கட்டுதல் – JJ | 24142.78 | 8583.79 | 27903.95 |
| 50 | போக்குவரத்து மேலாண்மைக்காக சென்னை பெருநகரப் பகுதிகளில் சாலை மேம்பாலங்கள் கட்டுதல் -JD | 1028.00 | 388.74 | 20.06 |
| 51 | பாலங்கள் கட்டுதல்/ திரும்ப கட்டுதல் - JE | 8356.82 | 2708.73 | 3831.97 |
| 52 | நபார்டு கடன் உதவியுடன் பாலங்கள் கட்டுதல் / திரும்ப கட்டுதல் மற்றும் சாலைகள் மேம்படுத்துதல் - JQ | 0.04 | 0.00 | 0.05 |
| 53 | தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்ட சாலைப் பணிகள் - JN | 4381.04 | 531.73 | 2000.02 |
| 54 | இருப்புப் பாதை மேம்பாலங்கள் / கீழ் பாலங்களைக் கட்டுதல் - JT | 27223.86 | 13192.52 | 31956.87 |
| 55 | இருப்புப் பாதை கடவுகளுக்கு பதிலாக இருப்புப் பாதை மேம்பாலங்கள் / கீழ் பாலங்கள் கட்டுதல் -JG | 5144.24 | 5755.38 | 12800.81 |
| 56 | ஹட்கோ கடனுதவியுடன் பாலங்கள் கட்டுதல் (நில எடுப்பு தொகை) - JB | 0.01 | 0.00 | 0.01 |

| வ. எண் | திட்டத்தின்பெயர் | வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2019-20 |
|---|---|---|---|---|
| | | 2018-19 | | |
| 57 | ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP) – புறவழிச்சாலைகள் அமைத்தல் -JO | 0.00 | 0.00 | 3586.17 |
| | **மொத்தம்** | **70276.79** | **31160.89** | **82099.91** |
| | **பெருநகரஅலகு** | | | |
| 58 | சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் | 47218.01 | 25954.74 | 57421.90 |
| | **மொத்தம்** | **47218.01** | **25954.74** | **57421.90** |
| | **தேசிய நெடுஞ்சாலைகள்** | | | |
| 59 | புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டம் - SA | 80000.00 | 59941.00 | 80000.00 |
| 60 | பாரத் நிர்மாண் திட்டம் (பராமரிப்பிற்காக ஒதுக்கப்படும் மாநில அரசின் நிதி) - JS | 744.09 | 527.47 | 503.36 |
| | **மொத்தம்** | **80744.09** | **60468.47** | **80503.36** |
| | **தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்** | | | |
| 61 | தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் | 48283.79 | 37594.62 | 45973.64 |
| | **மொத்தம்** | **48283.79** | **37594.62** | **45973.64** |
| | **முதன்மை இயக்குநர்** | | | |
| 62 | மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சாலைகளில் ஓடு தள மேற்பரப்பு நிலை குறித்த தகவல்கள் சேகரிப்பதற்கான உபகரணங்கள் பொருத்தப்பட்ட வாகனத்தினை இயக்குதல் மற்றும் பராமரித்தல் | 0.02 | 0.00 | 0.02 |
| | **மொத்தம்** | **0.02** | **0.00** | **0.02** |
| | **ஒட்டு மொத்தம்** | **924056.84** | **736254.59** | **1174945.25** |

### 1.2.2. *திட்டப் பணிகளின் செயல்பாடு*

2018-19 ஆம் ஆண்டில் செயலாக்கப்பட்ட திட்டப் பணிகளின் விவரம் மற்றும் 2019-20 ஆம் ஆண்டிற்கான இலக்குகள் **அட்டவணை** 6-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 6: திட்டப்பணிகளின்செயல்பாடு**

(பாலங்கள்/சிறு பாலங்கள் எண்ணிக்கையில், நீளம் கி.மீ.-ல்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | சாதனைகள் (2018 -19) | | இலக்குகள் (2019 -20) | |
|---|---|---|---|---|---|
| | | பாலங்கள்/ சிறு பாலங்கள்/ கட்டுமானங்கள் | சாலைகள் நீளம் | பாலங்கள்/ சிறு பாலங்கள்/ கட்டுமானங்கள் | சாலைகள் நீளம் |
| | **கட்டுமானம் மற்றும் பராமரிப்பு** | | | | |
| 1 | ஒருங்கிணைந்தசாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம் | | | | |
| | மாநிலநெடுஞ்சாலைகள் | 250 | 684 | 350 | 800 |
| | மாவட்ட முக்கிய சாலைகள் | 261 | 773 | 280 | 900 |
| | மாவட்டஇதர சாலைகள் | 439 | 2653 | 500 | 2800 |
| | மாவட்ட இதர சாலைகள் (சிறப்புக்கூறுதிட்டம்) | - | 680 | 13 | 600 |
| | **மொத்தம்** | **950** | **4790** | **1143** | **5100** |
| | **சாலையின் ஓடுதளத்தினை மேம்படுத்துதல்** | - | **2660** | - | **2800** |
| | **சாலைகள் / பாலங்கள்** | **950** | **7450** | **1143** | **7900** |
| | **கட்டிடங்கள்** | - | - | **6** | - |
| | **சுனாமி மறுவாழ்வுத் திட்டம் (மத்திய அரசு உதவியுடன்)** | - | - | - | - |
| | **நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்அலகு** | | | | |
| 2 | நபார்டு வங்கி கடனுதவியுடன் செயல்படுத்தப்படும் மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் மேம்பாடு | - | 5.80 | - | - |

| வ. எ ண் | திட்டத்தின் பெயர் | சாதனைகள் (2018-19) | | இலக்குகள் (2019-20) | |
|---|---|---|---|---|---|
| | | பாலங்கள்/ சிறு பாலங்கள்/ கட்டுமானங்கள் | சாலைகள் நீளம் | பாலங்கள்/ சிறு பாலங்கள்/ கட்டுமானங்கள் | சாலைகள் நீளம் |
| 3 | அரசு சாலைகளில் பாலங்கள் கட்டுதல் | 1 | - | - | - |
| 4 | அரசு சாலை மற்றும் கிராமச்சாலைகளில் பாலங்கள் கட்டுதல் | 50 | - | 65 | - |
| 5 | கிராமச்சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | - | - | 1 | - |
| 6 | பேருந்து வழித்தட சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | - | - | - | - |
| 7 | ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுத் திட்டம் | - | - | - | - |
| 8 | ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவிடன் செயல்படுத்தப்படும் சுனாமி அவசர கால உதவித் திட்டம் | - | - | - | - |
| 9 | புறவழிச்சாலைகள் (நில எடுப்பு) | - | - | - | - |
| 10 | **மாநில நிதியின் கீழ்** ஊராட்சி ஒன்றிய சாலைகள் / ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல் | - | 1322.39 | - | 1634.59 |
| 11 | **நபார்டு வங்கி கடனுதவியுடன்** ஊராட்சி ஒன்றிய சாலைகள் / ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல் | - | - | - | - |
| | **மொத்தம்** | **51** | **1328.19** | **66** | **1634.59** |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | சாதனைகள் (2018 -19) | | இலக்குகள் (2019 -20) | |
|---|---|---|---|---|---|
| | | பாலங்கள்/ சிறு பாலங்கள்/ கட்டுமானங்கள் | சாலைகள் நீளம் | பாலங்கள்/ சிறு பாலங்கள்/ கட்டுமானங்கள் | சாலைகள் நீளம் |
| | **திட்டங்கள்அலகு** | | | | |
| 12 | தற்போதுள்ள இரயில்வே கடவுகளுக்குப் பதிலாக இரயில்வே மேம்பாலங்களும் கீழ்பாலங்களும் கட்டுதல் - JJ | 4 | - | 4 | - |
| 13 | இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்பாலங்களைக் கட்டுதல் - JT | 2 | - | 6 | - |
| 14 | பாலங்கள் கட்டுதல்/ திரும்ப கட்டுதல் - JE | 2 | - | 1 | - |
| 15 | இரயில்வே கடவுகளுக்குப் பதிலாக இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் கட்டுதல் - JG | - | - | 4 | - |
| 16 | ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP) | | | | |
| 16 அ. | மாநில நெடுஞ்சாலை (JI-CRIDP) | 1 | - | - | - |
| 16 ஆ. | இதர மாவட்டச் சாலைகள் (JU-CRIDP) | - | - | 1 | - |
| | **மொத்தம்** | 9 | - | 16 | - |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | சாதனைகள் (2018 -19) | | இலக்குகள் (2019 -20) | |
|---|---|---|---|---|---|
| | | பாலங்கள்/ சிறு பாலங்கள்/ கட்டுமானங்கள் | சாலைகள் நீளம் | பாலங்கள்/ சிறு பாலங்கள்/ கட்டுமானங்கள் | சாலைகள் நீளம் |
| 17 | **சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்** | | | | |
| | அ) இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்பாலங்கள் | - | - | 1 | - |
| | ஆ) பல்வழிச் சாலை மேம்பாலங்கள் | - | - | 6 | - |
| | இ) ஆற்றுப் பாலங்கள் | 1 | - | 1 | - |
| | ஈ) நடை மேம்பாலங்கள்/ ஆகாய நடைப்பாதை | - | - | 1 | - |
| | உ) சாலைகள்/ பாலங்கள் | - | - | - | 2.63 |
| | **மொத்தம்** | **1** | - | **9** | **2.63** |
| | **தேசிய நெடுஞ்சாலை** | | | | |
| 18 | புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டம் | 2 | 618.84 | 5 | 800.00 |
| 19 | மாநிலங்களுக்கு இடையிலான சாலைகளை இணைக்கும் திட்டம் | - | 62.00 | - | 41.20 |
| | **மொத்தம்** | **2** | **680.84** | **5** | **841.20** |

### 1.3. திட்டம் சாரா பணிகளின் செயல்பாடு

சாலைகள் மற்றும் பாலங்களின் பராமரிப்பிற்காக ரூ.955.28 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.970.79 கோடி செலவில் 3284 கி.மீ. சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

#### *1.3.1. நிதி செயல்பாடு*

இத்திட்டத்தில் பல்வேறு பிரிவுகளின் கீழ் 2018-19 ஆம் ஆண்டில் திட்டம் சாரா பணிகளுக்கு செலவிடப்பட்ட விவரம் மற்றும் 2019-20 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு பற்றிய விவரங்கள் **அட்டவணை 7**-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 7: திட்டம் சாரா பணிகள்-நிதி ஒதுக்கீடு மற்றும் செலவினம்**

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் | வரவு -செலவு திட்ட மதிப்பீடு 2019-20 |
|---|---|---|---|---|
| | | 2018-19 | | |
| 1 | நகர்ப்புற தேசிய நெடுஞ்சாலைகள் | 234.52 | 234.48 | 250.94 |
| 2 | சென்னை மாநகரத்திலுள்ள முக்கிய சாலைகளின் பராமரிப்பு | 2110.64 | 2910.63 | 2321.70 |
| 3 | மாநில நெடுஞ்சாலைகள் | 17724.77 | 18074.91 | 19367.50 |
| 4 | மாவட்ட முக்கியச் சாலைகள் | 16362.09 | 16491.49 | 17594.67 |
| 5 | மாவட்ட இதர சாலைகள் | 57153.28 | 57491.51 | 61905.84 |
| 6 | கரும்புச் சாலைகள் | 1849.79 | 1833.06 | 2034.77 |
| 7 | நீலகிரி மாவட்டத்திலுள்ள மலைச் சாலைகளை மேம்படுத்துதல் | 92.50 | 42.64 | 100.78 |
| **மொத்தம்** | | **95527.59** | **97078.72** | **103576.20** |

***1.3.2. பணிகளின் செயல்பாடு***

2018-19 ஆம் ஆண்டில் திட்டம் சாரா பராமரிப்பின் கீழ், புதுப்பிக்கப்பட்ட சாலைகளின் நீளம் மற்றும் 2019-20ஆம் ஆண்டிற்கான இலக்கு ஆகியவை **அட்டவணை** 8-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 8: திட்டம் சாராப்பணிகள் - செயல்பாடுகள்**

(நீளம் கி.மீ.-ல்)

| வ. எண் | அலகின் பெயர் | சாதனைகள் 2018-19 | இலக்குகள் 2019-20 |
|---|---|---|---|
| 1 | கட்டுமானம் மற்றும் பராமரிப்பு | 3284 | 3300 |

## 2. முக்கிய திட்டங்களின் கீழ் செயல்பாடு மற்றும் பிரதானப் பணிகளின் விவரம்

நெடுஞ்சாலைத்துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகிற்கு 2018-19-ல், ரூ.4751.28 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் ரூ.4542.75 கோடி திட்டப்பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

## 2.1. ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

சாலைகளை அகலப்படுத்துதல், மேம்படுத்துதல், உறுதிப்படுத்துதல், சாலையின் ஓடுதள தரத்தினை மேம்படுத்துதல், புறவழிச்சாலைகள் அமைத்தல், சிறுபாலங்கள், சாலை பாதுகாப்பு பணிகள் போன்றவை போக்குவரத்து தேவைகளின் படி சாலைகளின் கொள்ளளவை அதிகரிக்கும் பணிகளில் அடங்கும். முக்கிய குறிக்கோளான சாலைப் பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்தும் பொருட்டு வடிவியல் மேம்பாட்டு பணிகள், விபத்து நிகழக்கூடிய இடங்களை மேம்படுத்துதல் போன்ற பணிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இவ்வனைத்து பணிகளும் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

2018 – 19-ல் ரூ.3312.47 கோடி செலவில் 4790 கி.மீ. நீள சாலைப் பணிகளும் 950 பாலங்கள் / சிறுபாலங்கள் / பாதுகாப்பு பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. சாலைகளின் ஓடுதள தரத்தினை மேம்படுத்தும் பணிகளின் கீழ், ரூ.587.79 கோடி செலவில் 2660 கி.மீ. நீள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### *2.1.1. ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் - மாநில நெடுஞ்சாலைகள்*

புதிய பணிகளாக 445.10கி.மீ. சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள், 12 பாலங்கள் / சிறு பாலங்கள் மற்றும் 333 பாதுகாப்புப்பணிகள் ஆகியவை ரூ.703.77 கோடி மதிப்பிற்கு 2018-19-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

மேலும், 2018-19 ஆம் நிதியாண்டில் நிலுவைப் பணிகளான, 728 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் மற்றும் 157 பாலங்கள் / சிறுபாலப்பணிகள் / பாதுகாப்பு பணிகள் ரூ.1227 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2018-19-ல் 684 கி.மீ. சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகளும், 250 பாலங்கள் / சிறுபாலங்கள் / பாதுகாப்பு பணிகளும் ரூ.1244.93 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

#### *2.1.1.1. ஈரோடு அரசு மருத்துவமனை சந்திப்பில் பல்வழிச்சாலை மேம்பாலம் கட்டுதல்*

ஈரோடு நகருக்குள் ஈரோடு - பெருந்துறை - காங்கேயம் சாலையில் கி.மீ.1/8ல் அரசு மருத்துவமனை சாலை சந்திப்பில் ஏற்படும் போக்குவரத்து நெரிலைத் தவிர்க்க மேம்பாலம் கட்டுவதற்காக, ரூ.58.54 கோடிக்கு 2016-17-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பாலப்பணிகள் முடிவுற்று போக்குவரத்து பயன்பாட்டிற்கென கடந்த பிப்ரவரி, 2019-ல் திறக்கப்பட்டது.

### *2.1.1.2. திருநெல்வேலியில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைத்தல்*

2017-18 ஆம் நிதியாண்டில், மதுரை – கன்னியாகுமரி சாலை கி.மீ.150/2 ல் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே பழைய பாலத்திற்கு இணையாக திருநெல்வேலி சந்திப்பில் உயர்மட்டப் பாலம் கட்டும் பணிக்கு ரூ.16.50 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

### *2.1.2. ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – மாவட்ட முக்கிய சாலைகள்*

2018-19ஆம் நிதியாண்டில், புதிய பணிகளாக ரூ.607.94 கோடி மதிப்பில் 659.03 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகளும், 17 பாலங்கள் / சிறு பாலங்கள் மற்றும் 262 பாதுகாப்புப் பணிகளும் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

2018-19 ஆம் நிதியாண்டில் நிலுவைப் பணிகளான, 779 கி.மீ. நீள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் மற்றும் 134 பாலங்கள் / சிறு பாலங்கள் / பாதுகாப்புப் பணிகள் ரூ.481 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

2018-19 ஆம் நிதியாண்டில் ரூ 617.28 கோடி செலவில், 773 கி.மீ. நீள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள், 261 பாலங்கள் / சிறுபாலங்கள் / பாதுகாப்புப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

### *2.1.2.1. கடலூர் மாவட்டம் வெலிங்டன் நீர்த்தேக்க உபரிநீர் செல்லும் வாய்க்காலின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைத்தல்*

2017-18 ஆம் நிதியாண்டில், திட்டக்குடி – சிறுபாக்கம் சாலையில் கி.மீ.3/8ல் வெலிங்டன் நீர்த்தேக்க உபரிநீர் செல்லும் வாய்க்காலின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டும் பணிக்கு ரூ.11.85 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

### *2.1.3. ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் –மாவட்ட இதர சாலைகள்*

2018-19 ஆம் நிதியாண்டில், புதிய பணிகளாக ரூ.1145.93 கோடி மதிப்பில் 1878.09 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகளும், 38 பாலங்கள் / சிறு பாலங்கள் மற்றும் 527 பாதுகாப்புப் பணிகளும் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

2018-19 ஆம் நிதியாண்டில் நிலுவைப் பணிகளான, ரூ.1669 கோடி மதிப்பிலான 2679 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் மற்றும்

229 பாலங்கள் / சிறுபாலங்கள் / பாதுகாப்புப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

கடந்த நிதியாண்டில், 2653 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகளும், 439 பாலங்கள்/சிறுபாலங்கள் / பாதுகாப்புப் பணிகளும் ரூ.1193.46 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (இதர மாவட்ட சாலை) கீழ்கண்ட உயர்மட்டப் பாலப்பணிகளுக்கு அரசினால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, செயலாக்கத்தில் உள்ளன.

1. நொய்யலாற்றின் குறுக்கே திருப்பூர் சிக்கண்ணா கல்லூரி அருகே ரூ.3.85 கோடிக்கு உயர்மட்டப் பாலம் கட்டுதல்.
2. சிவகங்கை மாவட்டத்தில் கன்னங்குடி – கூக்குடி சாலை கி.மீ. 2/8-ல் விருசுழி ஆற்றின் குறுக்கே ரூ.9 கோடிக்கு உயர்மட்டப் பாலம் கட்டுதல்.
3. திருவண்ணாமலை மாவட்டத்தில் தண்டரை – இறையூர் சாலை கி.மீ. 0/8-ல் ரூ.17.04 கோடிக்கு செய்யாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுதல்.
4. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கி.மீ. 2/6-ல் வி.சி.சி. சாலை முதல் பாத்தகோட்டா சாலை வரை ரூ.2.85 கோடிக்கு தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் திரும்பக் கட்டுதல்.
5. விழுப்புரம் மாவட்டத்தில் ரெட்டணை – மரூர் சாலை கி.மீ. 1/8-ல் ரூ.8.61 கோடிக்கு சங்கராபரணி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுதல்.
6. விழுப்புரம் மாவட்டத்தில் வெள்ளிமேடு பேட்டை – மைலம் சாலை கி.மீ. 21/0-ல் பிரிந்து செல்லும் ஆலகிராமம் - தென்புத்தூர் சாலையில் கி.மீ. 5/4-ல் தொண்டி ஆற்றின் குறுக்கே ரூ.8.65 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்டுதல்.
7. விழுப்புரம் மாவட்டத்தில் கடலூர் – சித்தூர் சாலையில் கி.மீ. 59/10 ல் பிரிந்து செல்லும் அருங்குறுக்கைச் சாலையில் கி.மீ. 5/0-ல் ரூ.10.05 கோடிக்கு கெடிலம் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுதல்.
8. மதுரை மாவட்டத்தில் மதுரை - மேலக்கால் சாலையில் துவரிமான் மற்றும் மா.நெ. 100-ஐ இணைக்கும் பரவை என்னுமிடத்தில் வைகை ஆற்றின் குறுக்கே ரூ.16.13 கோடியில் உயர்மட்டப் பாலம் அமைத்தல்.

9. மதுரை மாவட்டத்தில் வைகை ஆற்றின் இடது கரையில் குருவிக்காரன் சாலைப் பாலம் முதல் பி.டி.ஆர் பாலம் வரை (கி.மீ.0/0-1/4 வரை) ரூ.14.85 கோடி மதிப்பில் சாலை அமைத்தல் மற்றும் மேம்பாடு செய்தல்.

### *2.1.4. ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்-மாவட்ட இதர சாலைகள்- சிறப்பு உறுப்பு திட்டம்*

2018-19 ஆம் நிதியாண்டில், புதிய பணிகளாக 414.16 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல், 13 பாலங்கள் / சிறு பாலங்கள் / பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கு ரூ.228.31 கோடி மதிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன.

2018-19 ஆம் நிதியாண்டில் நிலுவைப் பணிகளான, 610கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் மற்றும் 17 பாலங்கள் / சிறுபாலங்கள் ரூ.224 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

2018-19 ஆம் நிதியாண்டில், ரூ.256.80 கோடி செலவில் 680 கி.மீ. நீளச் சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### *2.1.5. ஈரோடு வெளிவட்டச் சாலை*

ஈரோடு மாவட்டம், கொக்கராயன்பேட்டை முதல் திண்டல் வரை அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 14.80 கி.மீ. நீளமுள்ள வெளிவட்டச் சாலையானது, கட்டம் I, II மற்றும் III ஆகியவற்றை உள்ளடக்கியது. இத்திட்டத்தின் கீழ், காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப்பாலம் கட்டும் பணியினை உள்ளடக்கிய கட்டம் I (கி.மீ. 0/0 - 2/2) மற்றும் கட்டம் II-ல் 5.40 கி.மீ. (கி.மீ. 2/2 - 7/6) ஆகியவற்றில் பணிகள் முடிக்கப்பட்டு போக்குவரத்து பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டுள்ளது. ரூ.69.30 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டம் III-ல் (கி.மீ. 7/6 - 14/8) சாலை மேம்பாலம் (கி.மீ.11/2-11/6) உட்பட சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில், 815 மீ. நீளத்திற்கு மட்டும் நில எடுப்பு தொடர்பான வழக்குகள் நிலுவையிலுள்ளன. வழக்குகள் முடிவுற்றவுடன் பணிகள் முடிக்கப்படும்.

### 2.2. சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்

சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டமானது 2003-04 முதல் மாநில நிதி ஆதாரத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு, விரிவான போக்குவரவு மற்றும் போக்குவரத்து ஆய்வின் கீழ் அடையாளம் காணப்பட்ட பிரதான திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தி வருகிறது.

2018–19-ல் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள் ரூ.259.55 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், திட்டங்கள் அலகு

கணக்குத் தலைப்பின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் ரூ.20 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப பல்வேறு கணக்குத் தலைப்புகளின் கீழ் செலவிடப்பட்ட விவரங்கள் அட்டவணை 9-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 9: செலவின விவரங்கள்**

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | கணக்குத் தலைப்பு | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2018-19 | திருத்திய நிதி ஒதுக்கீடு 2018-19 | 2018-19-ம் ஆண்டின் செலவினம் |
|---|---|---|---|---|
| 1 | பணிகள் மற்றும் நில எடுப்பிற்கு - JW | 38007.15 | 26946.28 | 24036.92 |
| 2. | பணிகளுக்கு - KJ | 5817.71 | 2033.28 | 1277.82 |
| 3. | பணிகள் மற்றும் நில எடுப்பிற்கு - JH | 3393.15 | 905.90 | 640.00 |
| | **மொத்தம்** | **47218.01** | **29885.46** | **25954.74** |
| 4. | பாலப்பணிகளுக்கு - JD | 872.34 | 302.05 | 299.46 |
| 5. | JT | 4627.18 | 2618.40 | 1520.85 |
| 6. | JJ | 900.00 | 1000.00 | 180.13 |
| | **மொத்தம்** | **6399.52** | **3920.45** | **2000.44** |
| | **ஒட்டு மொத்தம்** | **53617.53** | **33805.91** | **27955.18** |

2018–19-ல் நிலுவைப் பணிகளாக 7 பல்வழிச்சாலை மேம்பாலங்கள், 8 இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்பாலங்கள், 5 ஆற்றுப்பாலங்கள், 3 சாலைப்பணிகள் மற்றும் ஒரு புதிய சாலைப் பணி ஆகியவை எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றில் 1 ஆற்றுப்பாலப் பணி ரூ.17 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளது.

### *2.2.1. பல்வழிச்சாலை மேம்பாலங்கள்*

2018-19-ல் 7 நிலுவைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றின் மொத்த மதிப்பு ரூ.593.65 கோடி ஆகும். இதில் 6 பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள மேம்பாலப் பணிக்கு நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. விவரம் பின்வருமாறு:

#### *2.2.1.1. நடைபெற்று வருபவை*

1. பல்லாவரத்தில் ரூ.82.66 கோடி மதிப்பில் பல்வழிச்சாலை மேம்பாலம்
2. வேளச்சேரி விஜயநகரம் சந்திப்பில் ரூ.108 கோடி மதிப்பில் பல்வழிச்சாலை மேம்பாலம்
3. காளியம்மன் கோயில் சாலை சந்திப்பில் ரூ.93.50 கோடி மதிப்பில் பல்வழிச்சாலை மேம்பாலம்

4. மேடவாக்கத்தில் ரூ.146.41 கோடி மதிப்பில் பல்வழிச்சாலை மேம்பாலம்
5. கீழ்கட்டளையில் ரூ.64 கோடி மதிப்பில் பல்வழிச்சாலை மேம்பாலம்
6. கொளத்தூர் ரெட்டேரியில் (வலது புறம்) ரூ.41.08 கோடி மதிப்பில் பல்வழிச்சாலை மேம்பாலம்

### *2.2.1.2. நில எடுப்பு மற்றும் விரிவான திட்ட அறிக்கை*

1. திருவான்மியூர் சந்திப்பில் ரூ.58 கோடி மதிப்பில் பல்வழிச்சாலை மேம்பாலம்.

பின்வரும் 15 பல்வழிச்சாலை மேம்பாலப் பணிகளுக்கான **விரிவான திட்ட அறிக்கை** தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

1. கிழக்குக் கடற்கரைச் சாலை மற்றும் திருவான்மியூர் லேட்டிஸ் பால சாலை சந்திப்பு.
2. மடிப்பாக்கம் பகுதியில் மவுண்ட்-மேடவாக்கம் சாலை மற்றும் தெற்கு உள்வட்டச் சாலை சந்திப்பு.
3. ஈ.வெ.ரா. சாலையில் நெல்சன் மாணிக்கம் சாலை மற்றும் அண்ணாநகர் 3வது நிழற்சாலை சந்திப்பு - இரண்டாம் நிலை (பகுதி -IV).
4. பூவிருந்தவல்லி - காட்டுப்பாக்கம் பகுதியில் மவுண்ட்- பூவிருந்தவல்லி -ஆவடி சாலை மற்றும் பூவிருந்தவல்லி-குன்றத்தூர் சாலை சென்னை-சித்தூர் பெங்களூரு சாலை இணையும் சந்திப்பு.
5. ஈ.வெ.இரா. சாலையில் இராஜா முத்தையா சாலையிலிருந்து புல்லா நிழற்சாலை வரையிலான சந்திப்பு.
6. கிழக்குக் கடற்கரைச் சாலை கி.மீ.11/8-23/2-ல் திருவான்மியூர் முதல் அக்கரை வரை ஆறுவழிச்சாலை அமைத்தல் (பல்வழிச்சாலை மேம்பாலம் அமைத்தல் உட்பட).
7. தேசிய நெடுஞ்சாலை 205 (சென்னை - திருத்தணி - ரேணிகுண்டா சாலை) கி.மீ.76/8 மற்றும் வானகரம் - அம்பத்தூர் சாலை கி.மீ.6/4 சந்திப்பில் நான்கு வழித்தட பல்வழிச்சாலை மேம்பாலம் அமைத்தல்.
8. தேசிய நெடுஞ்சாலை 205 (சென்னை - திருத்தணி - ரேணிகுண்டா சாலை) கி.மீ.68/4 மற்றும் மா.நெ. 55 (மவுண்ட் – பூவிருந்தவல்லி - ஆவடி சாலை) கி.மீ.20/8 சந்திப்பில் பல்வழிச்சாலை மேம்பாலம் அமைத்தல்.
9. மாதவரம் - செங்குன்றம் சாலை கி.மீ.4/2 மற்றும் உள்வட்டச் சாலை கி.மீ.19/100 சந்திப்பில் பல்வழிச்சாலை மேம்பாலம் அமைத்தல்.
10. மவுண்ட் - பூவிருந்தவல்லி - ஆவடி சாலையில் மியாட் மருத்துவமனை முதல் முகலிவாக்கம் வரை இராமாபுரம் L&T மற்றும் DLF வழியாக பல்லடுக்கு பல்வழிச்சாலை மேம்பாலம் அமைத்தல்.

11. மர்மலாங் பாலம் - இரும்புலியூர் சாலை கி.மீ.17/2-ல் மர்மலாங் பாலம் - இரும்புலியூர் சாலை மற்றும் மாடம்பாக்கம் சாலை இணையும் இடத்தில் பல்வழிச்சாலை மேம்பாலம் அமைத்தல்.
12. கொரட்டூரில், சென்னை - திருத்தணி - ரேணிகுண்டா சாலையில் (தே.நெ.205) கி.மீ.80/7-ல் பல்வழிச்சாலை மேம்பாலம் அமைத்தல்.
13. குன்றத்தூரில் பல்லாவரம் - குன்றத்தூர் சாலை மற்றும் சென்னை - கோடம்பாக்கம் -திருப்பெரும்புதூர் சாலை சந்திப்பில் பல்வழிச்சாலை மேம்பாலம் அமைத்தல்.
14. வடபழனி பல்வழிச்சாலை மேம்பாலத்தினை அசோக் பில்லர் சந்திப்பு வரை விரிவாக்கம் செய்தல்.
15. மடிப்பாக்கம் கைவேலி அருகே மர்மலாங் பாலம் - இரும்புலியூர் சாலை கி.மீ.6/5-ல் பல்வழிச்சாலை மேம்பாலம் அமைத்தல்.

### *2.2.2. சென்னை பெருநகரப் பகுதிகளில் இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள்*

2018–19-ல், ரூ.366.87 கோடி மதிப்பிலான 8 நிலுவைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன, இவற்றில் 1 பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள பணிகள் முன்செயலாக்கத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

#### *2.2.2.1. நடைபெற்று வருபவை*

1. கடவு எண்: 4க்கு பதிலாக கொரட்டூர் ரயில் நிலையம் அருகில் ரூ.19.97 கோடி மதிப்பில் இரயில்வே கீழ்பாலம் கட்டுதல்.

#### *2.2.2.2. எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை*

1. கடவு எண்: 32 - பெருங்களத்தூர் ரயில் நிலையம் அருகில் ரூ.206.83 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலம் கட்டுதல்.

#### *2.2.2.3. நில எடுப்பு மற்றும் விரிவான திட்ட அறிக்கை*

1. கடவு எண்: 14க்கு பதிலாக வேப்பம்பட்டு ரயில் நிலையம் அருகில் ரூ.29.50 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலம் கட்டுதல் (நில எடுப்பு).

2. கடவு எண்: 4க்கு பதிலாக திருவொற்றியூர் - எண்ணூர் ரயில் நிலையங்களுக்கு அருகில் ரூ.28 கோடி மதிப்பில் இரயில்வே கீழ்ப்பாலம் கட்டுதல் (விரிவான திட்ட அறிக்கை மற்றும் நில எடுப்பு).

3. கடவு எண்: 6க்கு பதிலாக திருவொற்றியூர் - விம்கோ நகர் ரயில் நிலையங்களுக்கு அருகில்

ரூ.25.50 கோடி மதிப்பில் இரயில்வே கீழ்ப்பாலம் கட்டுதல் (விரிவான திட்ட அறிக்கை).

4. கடவு எண்: 16க்கு பதிலாக நந்தியம்பாக்கம் - மீஞ்சூர் இரயில் நிலையங்களுக்கு அருகில் ரூ.28.32 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலம் கட்டுதல் (விரிவான திட்ட அறிக்கை மற்றும் நில எடுப்பு).

5. கடவு எண்: 22க்கு பதிலாக திரிசூலம் இரயில்வே நிலையம் அருகில் ரூ.14 கோடி மதிப்பில் இரயில்வே கீழ்பாலம் கட்டுதல் (விரிவான திட்ட அறிக்கை).

6. கடவு எண்: 27க்கு பதிலாக குரோம்பேட்டை ராதா நகர் இரயில் நிலையம் அருகில் ரூ.14.75 கோடி மதிப்பில் வரையறுக்கப்பட்ட உபயோகத்திற்கான சுரங்கப்பாதை கட்டுதல் (விரிவான திட்ட அறிக்கை மற்றும் நில எடுப்பு).

### *2.2.3. சென்னை பெருநகரப் பகுதிகளில் இரயில்வே மேம்பாலங்களை அகலப்படுத்துதல்*

கீழ்கண்ட இடங்களில் அமைந்துள்ள இரயில்வே மேம்பாலங்களின் அகலம், தற்போதைய போக்குவரத்துத் தேவைக்கு போதுமானதாக இல்லை. எனவே, அவற்றை அகலப்படுத்தும் பிரேரணைகளாவன:

- ரூ.12 கோடி மதிப்பில் "மவுண்ட் – பூவிருந்தவல்லி – ஆவடி சாலையில் கி.மீ.20/8ல் இரயில்வே மேம்பாலம் அகலப்படுத்துதல்" பணி, பணப்பகிர்மான முறையில் இரயில்வே திட்டப் பணிகள் 2019-20-ல் சேர்ப்பதற்காக பரிசீலனையில் உள்ளது.

- உள்வட்டச் சாலையில் கி.மீ.12/2 – 13/2ல் உள்ள இரயில்வே மேம்பாலத்தினை இரு பக்க நான்கு வழித்தடத்திற்கு அகலப்படுத்தும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டவுடன் பணி செயல்படுத்தப்படும்.

### *2.2.4. ஆற்றுப்பாலங்கள்*

சென்னை பெருநகரப் பகுதிகளில் 2018-19-ல் 5 நிலுவைப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றின் மொத்த மதிப்பு ரூ.119.04 கோடி ஆகும். இவற்றில் 1 பணி முடிக்கப்பட்டுள்ளது, 1 பணி நடைபெற்று வருகிறது. 2 ஆற்றுப்பாலப் பணிகளுக்கு நில எடுப்பு முடியும் தருவாயில் உள்ளது. மீதமுள்ள 1 பாலப் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. அவற்றின் விவரம் பின்வருமாறு:

### *2.2.4.1. முடிவுற்றவை*

1. இராமாபுரம் அருகில் மவுண்ட் - பூவிருந்தவல்லி – ஆவடி சாலையில் கி.மீ.2/6-ல் அடையாறு ஆற்றின் குறுக்கே உள்ள உயர்மட்டப் பாலம் ரூ.17 கோடி மதிப்பில் அகலப்படுத்தப்பட்டுள்ளது.

### *2.2.4.2. நடைபெற்று வருபவை*

1. திருவொற்றியூர் - பொன்னேரி - பஞ்செட்டி சாலையில் கி.மீ.0/6ல் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே உயர்மட்டப் பாலம் ரூ.58.64 கோடி மதிப்பில் கட்டுதல்.

### *2.2.4.3. நில எடுப்பு*

1. மவுண்ட் - பூவிருந்தவல்லி - ஆவடி சாலையில் இருந்து பருத்திப்பட்டு – திருவேற்காடு நகராட்சி சாலை கி.மீ.14/4ல் கூவம் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் ரூ.7.40 கோடி மதிப்பில் கட்டுதல்.
2. நொளம்பூர் சாலை சந்திப்பில் கூவம் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் ரூ.36 கோடி மதிப்பில் கட்டுதல்

### *2.2.4.4. விரிவான திட்ட அறிக்கை*

1. பாடிக்குப்பத்தில் கூவம் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுதல்.

### *2.2.5. புதிய இணைப்புச் சாலைகள் அமைத்தல்/ சாலைகளை அகலப்படுத்தும் பணிகள்*

போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, முக்கிய விடுபட்ட வழித்தடங்களை மேம்படுத்துவது மிகவும் அவசியமாகிறது.

2018-19-ல், 2 சாலைகளை அமைத்தல், சாலை அகலப்படுத்தும் பணி ஆகியவற்றிற்கான நில எடுப்பு பணி மற்றும் 1 புதிய இணைப்புச் சாலை அமைக்கும் பணி ஆகியன நிலுவையில் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றின் மதிப்பு ரூ.634.36 கோடி ஆகும். மேலும் 1 புதிய பணி ரூ.36.69 கோடி மதிப்பில் துவங்கப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு:

### *2.2.5.1. நில எடுப்பு*

1. தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலை கி.மீ.0/0-8/4 வரை (நில எடுப்பு மட்டும்) ரூ.75.50 கோடி மதிப்பில் அமைத்தல்
2. கிழக்குக் கடற்கரைச் சாலை கி.மீ.11/8-23/2 திருவான்மியூர் முதல் அக்கரை வரை (நில எடுப்பு மட்டும்) ரூ.354.66 கோடி மதிப்பில் ஆறுவழிச்சாலை அமைத்தல்

3. இராஜீவ் காந்தி சாலை மற்றும் கிழக்குக் கடற்கரைச் சாலையை நீலாங்கரையில் இணைக்கும் புதிய சாலை மற்றும் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே பாலம் ரூ.204.20 கோடி மதிப்பில் அமைத்தல்

### *2.2.5.2. நடைபெற்று வருபவை*

1. கி.மீ.5/450-8/080-ல் தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலை (நில எடுப்பு முடிவுற்ற பகுதி) ரூ.36.69 கோடி மதிப்பில் அமைத்தல்

### *2.2.6. பாதசாரிகளின் உள்கட்டமைப்பு வசதிகள்*

சென்னை பெருநகரப் பகுதியில் கீழ்கண்ட 2 இடங்களில் பாதசாரிகள் சுரங்க நடைபாதை அமைக்கும் பணிகள் நிலுவைப் பணிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

1. சென்னை அண்ணா சாலையில் ஏ.ஜி சர்ச் அருகில்
2. சென்னை ஜி.எஸ்.டி சாலையில் கிண்டி - எம்.கே.என் சாலை சந்திப்பில்

### *2.2.7. ஆகாய நடைபாதை*

தாம்பரம் சந்திப்பில், தாம்பரம் இரயில் நிலையம் மற்றும் பேருந்து நிலையத்தை இணைக்கும் வகையில் நகரும் படிகட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலம் மற்றும் ஆகாய நடைபாதை அமைக்கும் பணிக்கு ரூ.19.75 கோடி மதிப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணி செயலாக்கத்தில் உள்ளது.

மேலும், கிழக்கு மற்றும் மேற்கு தாம்பரம் பகுதிகளை, தற்போதுள்ள பேருந்து நிலையம், தாம்பரம் இரயில் நிலையத்துடன் இணைக்கும் வகையில் நகரும் படிகட்டு மற்றும் பிற வசதிகளுடன் கூடிய ஆகாய நடைபாதை அமைத்தல் மற்றும் தாம்பரம் பேருந்து நிலையத்தை மேம்படுத்தும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### *2.2.8. 2018-19-ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகள்*

கீழ்கண்ட மூன்று இடங்களில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கான முதற்கட்ட சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

1. சென்னை - திருத்தணி - ரேணிகுண்டா சாலையில் (நகர்ப்புற மா.நெ. 148) கி.மீ.75/6-ல் உள்ள இருவழித் தட மேம்பாலத்திற்கு பதிலாக இரயில்வே மேம்பாலம் அமைத்தல்.

2. சர்தார் படேல் சாலை மற்றும் ராஜீவ்காந்தி சாலை ஆகியவற்றை இணைக்கும் மத்திய கைலாஷ் பகுதியில் பல்வழிச்சாலை மேம்பாலம் அமைத்தல்.
3. சென்னை உள்வட்டச் சாலை கி.மீ.9/300-ல் கேந்த்ரிய வித்யாலயா பள்ளி அருகில் நடை மேம்பாலம் அமைத்தல்.

## 2.3. இரயில்வே திட்டப் பணிகளின் கீழ் இரயில்வே கடவுகளில் இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் கட்டுதல்

பொது மக்களின் நலன் கருதி இரயில் வாகனச் செறிவு 1 இலட்சத்திற்கு மேலுள்ள இரயில்வே கடவுகளை மாற்றியமைக்கும் பொருட்டு நெடுஞ்சாலைத்துறையானது இரயில்வே துறையுடன் இணைந்து 50:50 பணப்பகிர்மான அடிப்படையில் இரயில்வே மேம்பாலம் / கீழ்பாலங்கள் கட்டும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இரயில்வே திட்டப் பணிகளின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட 102 பணிகளில், 54 பணிகளுக்கு ரூ.1758.29 கோடி மதிப்பில் கட்டுமானப் பணிகளுக்கான நிர்வாக ஒப்புதலும் மற்றும் மீதமுள்ள 48 பணிகளுக்கு ரூ.280.31 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் / முதற்கட்ட பணிகளுக்கான நிர்வாக ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது.

இரயில்வே திட்டப் பணிகளின் கீழ் கட்டுமானப் பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள 54 பணிகளில், 6 பணிகள் ரூ.247.03 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. 32 பணிகள் ரூ.1086.94 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 16 பணிகள் ரூ.424.32 கோடி மதிப்பில் கட்டுமானப் பணிக்கு முந்தைய பல்வேறு நிலைகளில் உள்ளன.

இரயில்வே திட்டப் பணிகளின் கீழ் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் முதல் கட்டப் பணிகளுக்காக நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள 48 பணிகளில், 21 பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்/ நில எடுப்பு / பயன்பாட்டுச் சாதனங்களை மாற்றியமைத்தலுக்காக ரூ.271.98 கோடி மதிப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 27 பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் ரூ.8.33 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.

2018-19 ஆம் நிதி ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.279.20 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## 2.4. நபார்டு வங்கி கடனுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### *2.4.1. மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் மேம்பாடு செய்தல் திட்டம்*

இத்திட்டத்தின் கீழ், நிலுவையிலிருந்த 5.80 கி.மீ. நீளமுள்ள 2 சாலைப்பணிகள் ரூ.1.89 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### *2.4.2. அரசு சாலைகளில் பாலங்கள் கட்டுதல் திட்டம்*

இத்திட்டத்தின் கீழ், காஞ்சிபுரம் மாவட்டத்தில் நிலுவையிலிருந்த சட்ராஸ் - செங்கல்பட்டு - காஞ்சிபுரம் - அரக்கோணம் - திருத்தணி சாலையில் கி.மீ 0/8-ல் உயர்மட்ட பாலம் திரும்பக் கட்டுதல் பணியானது ரூ.0.94 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டுள்ளது.

### *2.4.3. அரசு சாலை மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் பாலங்கள் கட்டுதல்*

இத்திட்டத்தின் கீழ், நிலுவையிலிருந்த 192 பாலப்பணிகள் மற்றும் 2018-19-ல் புதிதாக ஒப்புதல் அளிக்கப்பட்ட 80 பாலப் பணிகள், ஆகியன ரூ.710.44 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு, பல்வேறு நிலைகளில் உள்ளன.

இவற்றில் ரூ.115.11 கோடி செலவில் 50 பாலப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### *2.4.4. கிராமச் சாலைகள் திட்டம்*

இத்திட்டத்தின்கீழ், தரப்பாக்கம் - அனகாபுத்தூருக்கு இடையே உயர்மட்ட பாலம் கட்டும் நிலுவைப்பணி ரூ.1.17 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இப்பணி, இந்திய விமானப்படைக்கு சொந்தமான பகுதியில் வருவதால், நிலமாற்றம் தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றன. நிலமாற்றம் முடிவுற்றபின், மீதமுள்ள பணிகள் முடிக்கப்படும்.

## 2.5. மாநில நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### *2.5.1. ஊராட்சி ஒன்றிய சாலைகள் / ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல்*

2017-18 முதல் மாநில நிதியின் கீழ், ஊராட்சி ஒன்றிய சாலைகள் / ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்தும் பணி சிறப்புத் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் நிலுவையிலிருந்த ரூ.508.33 கோடி மதிப்பிலான 1418 கி.மீ நீளமுள்ள 458 ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி சாலைகளும், புதிதாக ஒப்புதல் அளிக்கப்பட்ட

ரூ.882.62 கோடி மதிப்பிலான 1539 கி.மீ நீளமுள்ள 516 ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி சாலைகளும் மாநிலத் திட்டத்தின்கீழ், மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்த செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இவற்றில் 1322.39 கி.மீ. நீளமுடைய 422 சாலைகள், ரூ.437 கோடி செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

### 2.6. இரயில்வே கடவுகளில் அமையவுள்ள இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள்

இரயில்வே கடவுகளுக்குப் பதிலாக நிலுவையில் இருந்த 21 இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் இரயில்வே திட்டப்பணிகள் திட்டத்தின்கீழ் ரூ.261.65 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் தஞ்சாவூரில் இரயில்வே கடவு எண் 304-க்கு மாற்றாக ரூ.52.12 கோடி மதிப்பில் 1 இரயில்வே மேம்பாலம், விழுப்புரம் வெங்கடேசபுரத்தில் இரயில்வே கடவு எண் 2-க்கு மாற்றாக ரூ.34.75 கோடி மதிப்பில் 1 இரயில்வே மேம்பாலம், திருவாரூர், நீடாமங்கலத்தில் இரயில்வே கடவு எண். 22-க்கு மாற்றாக ரூ.27.17 கோடி மதிப்பில் 1 இரயில்வே மேம்பாலம் மற்றும் ஈரோடு, சாஸ்திரி நகரில் இரயில்வே கடவு எண் 124-க்கு மாற்றாக ரூ.10.10 கோடி மதிப்பில் 1 இரயில்வே மேம்பாலம், ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 2.7. புறவழிச்சாலைகள்

நகரங்கள் மற்றும் சிறுநகரங்களில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு புறவழிச்சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பயண நேரத்தினையும் மற்றும் வாகன இயக்கச் செலவினை குறைப்பதற்கும் புறவழிச்சாலைகள் பயன்படுகின்றன. கால விரயத்தை தவிர்க்கும் வகையில் முதற்கட்டமாக புறவழிச்சாலைகள் அமைப்பதற்கு தேவைப்படும் நிலம் கையகப்படுத்தும் பணிகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படுகின்றன. தற்சமயம் 4 புறவழிச்சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2011-12 முதல் 2018-19 வரையிலான புறவழிச்சாலைகளின் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 10 : புறவழிச்சாலை பணிகளின் விவரம்**

| பணி நிலவரம் | பணிகளின் எண்ணிக்கை |
|---|---|
| முடிக்கப்பட்ட பணிகள் | 24 |
| சாலைப்பணி நடைபெறும் பணிகள் | 4 |
| நில எடுப்பு நடைபெறும் பணிகள் | 42 |
| விரிவான திட்ட அறிக்கை நிலையில் உள்ளவை | 24 |
| **மொத்தம்** | **94** |

## 2.8. சாலை ஓடுதளப்பாதையின் தரத்தினை உயர்த்துதல்

2018–19-ல் புதிய பணிகளாக ரூ.850 கோடி மதிப்பில் சாலையின் ஓடுதள தரத்தினை மேம்படுத்த 3826 கி.மீ. நீளச் சாலைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ.587.79 கோடி செலவில் 2660 கி.மீ. நீளச் சாலைகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 2.9. சுனாமி மறுவாழ்வு திட்டம்

2018-19-ம் நிதியாண்டில் 5 நிலுவைப் பாலப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதில் 4 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பசியாவரம் காப்பு காட்டில் அமைய உள்ள ஒரு பாலப் பணிக்கு மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறையிடமிருந்து அனுமதி பெறப்பட்டு, பணி துவங்கப்படவுள்ளது.

## 2.10. விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதியின் பணிகள்

2014-15-ல் அறிவிக்கப்பட்டபடி முதற்கட்டமாக ரூ.250 கோடி மதிப்பிலான 14 பணிகளும், இரண்டாம் கட்டமாக ரூ.150 கோடி மதிப்பிலான 22 பணிகளும் ஒப்புதல் பெறப்பட்டன. ஒப்புதல் அளிக்கப்பட்ட 36 பணிகளில் இதுவரை 35 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன மற்றும் 1 பணி முன்னேற்றத்தில் உள்ளது. 2018-19-ல் இத்திட்டத்தின் கீழ் ரூ.27.32 கோடி செலவிப்பட்டுள்ளது.

## 2.11. செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம்

சாலை உடைமைகளை திறன்பட பாதுகாக்க ஒரு கோட்டத்தின் அனைத்து மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளில் 5 வருட காலத்திற்கு செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகிறது. இத்திட்டத்தில் முதல்நிலை சீரமைப்பு, காலமுறை புதுப்பித்தல், சிறு மேம்பாட்டுப் பணிகள், பராமரிப்புப் பணிகள், அவசரகாலப் பணிகள் போன்ற பணிகள் அடங்கியுள்ளன.

2012-13-ல் பொள்ளாச்சி கோட்டத்தில் இந்த ஒப்பந்தமுறை அறிமுகப்படுத்தப்பட்டு ரூ.233.93 கோடி மதிப்பில் 5 வருட செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தத்தின் கீழ் மேம்பாடு செய்ய எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் பிப்ரவரி 2019 இல் நிறைவுற்றது. மேலும், இத்திட்டத்தின் சிறந்த நடைமுறை காரணமாக கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், திருவள்ளூர் மற்றும் விருதுநகர் கோட்டங்களில் உள்ள மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளில் பணிகளை மேற்கொள்ள இத்திட்டமானது நீட்டிக்கப்பட்டுள்ளது. 1564 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலை மற்றும் 1382 கி.மீ. நீள மாவட்ட முக்கிய சாலைகள் இந்த பராமரிப்புத் திட்டத்தில் உள்ளன.

## 2.12. சென்னை வெளிவட்ட சாலையில் சாலை வலைதளங்களை உருவாக்குதல்

2012-13-ன் நிதிநிலை அறிக்கையின் போது விதி எண் 110 இன் கீழ் சாலை வலைதளங்களை உருவாக்குவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, இப்பணிக்கு ரூ.5.22 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 15 சாலைத் தொடர்களுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடிவுற்றுள்ளது. அவற்றுக்கான நில திட்ட அட்டவணை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## 2.13. தமிழ்நாடு முதலீட்டு வளர்ச்சித் திட்டம்-II

புதுவாயல் – பழவேற்காடு சாலை கி.மீ. 2/0 ல் அமையவுள்ள சென்னை, மஹிந்திரா தொழிற் பூங்காவிற்கு, சரக்கு பெட்டகப் போக்குவரத்தினை எளிதாக கையாளும் வகையில் புதுவாயல் – பழவேற்காடு சாலை (6.20 கி.மீ.) தொடரை நான்குவழித்தட சாலையாக அகலப்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இச்சாலையில் கி.மீ. 0/0 - 2/0 வரை நான்குவழிச் சாலையாக அகலப்படுத்தும் பணி 2017-18 ஆம் ஆண்டின் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டது. கி.மீ. 2/0-6/2 வரையுள்ள சாலை பகுதியை இடைவழித் தடத்திலிருந்து நான்குவழித் தடமாக அகலப்படுத்தும் பணி ரூ.45 கோடி மதிப்பில் தமிழ்நாடு முதலீட்டு வளர்ச்சி திட்டம்-II-ல் ஒப்புதல் பெறப்பட்டு நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

## 2.14. சாலை பாதுகாப்பு பணிகள்

சாலை விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்புகளை குறைக்கும் வகையில் சாலை பாதுகாப்பு நிதியிலிருந்து ரூ.500 கோடி மதிப்பில் சாலைப் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 2014-15 முதல் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சாலை பாதுகாப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆக மொத்தம் ரூ.1652.19 கோடி மதிப்பிலான சாலை பாதுகாப்பு பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை 11 : சாலை பாதுகாப்புப் பணிகள்**

**(ரூ.கோடியில்)**

| வ. எண் | நிதி ஒதுக்கீடு விவரங்கள் | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டு | சி.ஆர்.ஐ.டி.பி. | சாலை பாதுகாப்பு நிதி | மொத்தம் |
| 1 | 2014-2015 | 250.00 | 200.00 | 450.00 |
| 2 | 2015-2016 | 206.87 | 100.00 | 306.87 |
| 3 | 2016-2017 | 203.07 | 100.00 | 303.07 |
| 4 | 2017-2018 | 200.15 | 100.00 | 300.15 |
| 5 | 2018-2019 | 292.10 | - | 292.10 |
| **மொத்தம்** | | | | **1652.19** |

சாலை பாதுகாப்பு நிதியின் கீழ் 2014-15 முதல் 2017-18 வரை 1746 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் 1293 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### 2.15. நிரந்தர வெள்ள சீரமைப்பு பணிகள்

இத்திட்டத்தின்கீழ், ரூ.514.05 கோடி மதிப்பில் பாலங்கள், சிறுபாலங்கள், தடுப்பு சுவர் பணிகள், வடிகால் பணிகள், வெள்ள சீரமைப்பு பணிகளின் போது கையாளுவதற்குத் தேவையான உபகரணங்களான நீரேற்றும் கருவி, பள்ளம் தோண்டும் கருவிகள் பெறுவதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், ரூ.2.16 கோடி மதிப்பில் 21 பெரிய பாலங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

### 2.16. மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் மேம்பாட்டு நிதி

மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.84.18 கோடி மதிப்பில் 15 பணிகள் கிருஷ்ணகிரி, மதுரை, பெரம்பலூர், சிவகங்கை மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன.

### 2.17. மாநகராட்சி எல்லைக்குள் மேம்பாட்டு பணிகள்

மாநகர சாலைத் தொடர்களில், சாலை கட்டமைப்பு வசதிகளை பெருக்க 2018-19-ல் மதுரை, திண்டுக்கல், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகராட்சி பகுதிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இப்பணிக்கு ரூ.252.73 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### 2.18. விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு பணிகளின் விபரம்

விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகள் பின்வருமாறு:

**அட்டவணை 12: விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு பணிகள்**

(ரூ. இலட்சத்தில்)

| வ.எண் | மாவட்டம் | பணியின் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1. | வேலூர் | காங்கேயநல்லூர் முதல் சத்துவாச்சாரி கிராமங்களை இணைக்கும் வகையில் பாலாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டும் பணி | 25.00 |
| 2. | கள்ளக்குறிச்சி | கடலூர் - சித்தூர் சாலையில் (மா.நெ.9) கி.மீ. 72/0 - 72 /6 ல் தென்பெண்ணையாற்றின் குறுக்கே | 25.00 |

| வ.எண் | மாவட்டம் | பணியின் பெயர் | தொகை |
|---|---|---|---|
| | | தரைமட்ட பாலத்திற்கு பதிலாக உயர்மட்ட பாலம் அமைக்கும் பணி | |
| 3. | அரியலூர் மற்றும் தஞ்சாவூர் | தஞ்சாவூர் மாவட்டத்தில் மெட்டுதெருவையும் மற்றும் அரியலூர் மாவட்டத்தில் மேலராமநல்லூரையும் இணைத்து (இணைப்பு சாலையுடன் கூடிய) கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம் மற்றும் மண்ணியாற்றின் குறுக்கே பாலம் | 37.50 |
| 4. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் நகரில் ஒப்பணக்கார வீதியில் ஆத்துப்பாலம் மற்றும் உக்கடம் வரை சாலை மேம்பாலத்தை நீட்டித்தல் பணி | 12.00 |
| **மொத்தம்** | | | **99.50** |

### 2.19. பராமரிப்பு பணிகள்

உரிய நேரத்திலான சாலைகளின் பராமரிப்பு அதன் நீடித்த தன்மை பெரும் பங்கு வகுக்கிறது. 2018-19-ல், பராமரிப்பு பணிகளின் கீழ் ரூ.976.26 கோடி செலவில் 3284 கி.மீ. நீள சாலைகளில் புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.20. தேசிய நெடுஞ்சாலை திட்டங்கள்

மாநில எல்லைக்குள் மொத்தம் 6634 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளன. இவற்றில் 1900 கி.மீ. நீள சாலைகள் மாநிலத்தின் தேசிய நெடுஞ்சாலை அலகின் மூலமும் மீதமுள்ள 4734 கி.மீ. நீளம் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

#### *2.20.1. தேசிய நெடுஞ்சாலை திட்டப்பணிகள்*

மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம், ஆண்டுத்திட்டம் 2018–19-ன் கீழ் ரூ.1294.71 கோடி மதிப்பிலான 142.33 கி.மீ. நீளமுள்ள 24 சாலைப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கியது. மேலும் ரூ.1557 கோடி மதிப்பிலான 738.67 கி.மீ. நீளமுள்ள 70 சாலைப் பணிகள் நிலுவைப் பணிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில் 2018-19-ல் 292.08 கி.மீ. நீளத்திற்கு 25 சாலைப் பணிகளும் மற்றும் 14 பாலப்பணிகளும் ரூ.883.96 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

#### *2.20.2. காலமுறை புதுப்பித்தல் / ஓடுதள தரத்தை மேம்படுத்துதல் திட்டம்*

இத்திட்டத்தின் கீழ் ரூ.25.76 கோடி மதிப்பிலான 41.55 கி.மீ. நீளமுள்ள 5 சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில் 22.5 கி.மீ. நீளத்திற்கு 2 சாலைப்பணிகள் ரூ.18.51 கோடி செலவில் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 3 பணிகள் நடைபெற்று வருகின்றன.

***2.20.3. மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படும் திட்டங்கள்***

***2.20.3.1. புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டம்***

01.04.2018 நாளளவில் இத்திட்டத்தின் கீழ் ரூ.1138.09 கோடி மதிப்பில் 1289.96 கி.மீ. நீளத்திற்கு நிலுவைப் பணிகளாக 179 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில் 618.84 கி.மீ. நீளத்திற்கு 87 சாலைப்பணிகள் ரூ.599.41 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் 2018-19-ல் ரூ.1996.40 கோடி மதிப்பில் 619.52 கி.மீ. நீளத்திற்கு 71 சாலைப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தில் 2019-20ஆம் நிதியாண்டிற்கு ரூ.800 கோடி மாநில அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

***2.20.3.2. மாநிலங்களுக்கிடையிலான சாலைகளை இணைக்கும் திட்டம்***

இத்திட்டத்தில் 2018-19-ல் ரூ.130.47 கோடி மதிப்பிலான 103.20 கி.மீ. நீளத்திற்கு 6 சாலை நிலுவைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில் 62 கி.மீ. நீளமுள்ள 5 சாலைப் பணிகள் ரூ.62.88 கோடியில் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணி நடைபெற்று வருகிறது.

***2.20.3.3. பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம்***

நாட்டில் வறுமை ஒழிப்பின் ஒரு பகுதியாக இணைக்கப்படாத குடியிருப்புகளுக்கு சாலை இணைப்பு வழங்குவதற்காக பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் மத்திய அரசால் துவங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதி மத்திய சாலை நிதியிலிருந்து பெறப்படுகிறது. கிராமச் சாலைகளின் தொடர்ச்சியான பராமரிப்பை உறுதிப்படுத்துவதற்காகவும், உயர்ந்த தரநிலையில் சாலைகளை அமைக்கவும், மாநில அளவிலான கொள்கை வளர்ச்சிக்கு உதவவும் மத்திய அரசு முயற்சிகள் எடுத்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சாலைப் பணிகள் ஒவ்வொரு கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டன. பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் - I இல் மேற்கொள்ளப்பட்ட கட்டம் 1 மற்றும் கட்டம் 2 பணிகள் அனைத்தும் முடிவுற்றன. கட்டம் 3 முதல் 5 வரையான பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் - I பணிகள் மற்றும் பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் பகுதி II பணிகள் தற்போது பராமரிப்பு நடைபெற்று வருகிறது.

### *2.20.4. இதர செயல்திட்டங்கள்*

#### *2.20.4.1. சேதுபாரதம் திட்டம் - தேசிய நெடுஞ்சாலைகளில் இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்பாலங்கள் கட்டுதல்*

இத்திட்டத்தின்கீழ், தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள இரயில்வே கடவுகளுக்குப் பதிலாக 8 மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் கட்டும் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ஆலோசகர்களை மத்திய அரசு நியமித்துள்ளது. இவற்றில் 2 பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கையானது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 6 விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

#### *2.20.4.2. பேருந்து முனையம்*

பாரத்மாலா திட்டத்தின் ஒரு பகுதியாக பயணிகளின் நவீன உயரிய வசதிகள் கொண்ட பேருந்து முனையங்கள் சேலம், கோயம்புத்தூர், ஆகிய நகரங்களில் மத்திய அரசால் அமைக்கப்படவுள்ளன. மேற்கண்ட பணிகளின் விரிவான திட்ட அறிக்கை மற்றும் ஆய்வினை சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய நெடுஞ்சாலை உள்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

#### *2.20.4.3. தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் வழங்கப்பட்ட பணிகள்*

(அ) 55.00 கி.மீ. நீளத்திற்கு பெரம்பலூர், ஆத்தூர் சாலையை (தே.நெ. 136) மேம்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) 135.00 கி.மீ. நீளத்திற்கு தொப்பூர் - மேட்டூர் - பவானி - ஈரோடு சாலையை (தே.நெ. 544 எச்) மேம்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது

(இ) இரும்புலியூர் - வண்டலூர் தேசிய நெடுஞ்சாலையை (2.30 கி.மீ.) ரூ.20.77 கோடி மதிப்பிலும் மற்றும் 5.30 கி.மீ. நீளமுள்ள வண்டலூர் - கூடுவாஞ்சேரி சாலையை ரூ.44.48 கோடி மதிப்பிலும் அகலப்படுத்தும் பணிக்கு தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் ஒப்புதல் பெறப்பட்டு தற்பொழுது சாலைப்பணி நடைபெற்று வருகின்றது.

## 2.21. மாநில நிதி திட்டங்கள்

### *2.21.1. ஆற்றுப்பாலப் பணிகள்*

#### *2.21.1.1. முடிக்கப்பட்ட ஆற்றுப் பாலப்பணிகள்*

1. கடலூர் மாவட்டம் புவனகிரி அருகே விழுப்புரம் – பாண்டிச்சேரி – நாகப்பட்டினம் சாலையில் (கைவிடப்பட்ட தேசிய நெடுஞ்சாலை 45ஏ) கி.மீ.104/2-ல் வெள்ளாற்றின் குறுக்கே ரூ.22.57 கோடி மதிப்பில் உயர்மட்டப்பாலம் திரும்பக் கட்டுதல்.
2. தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிபட்டி - மல்லாபுரம் சாலையில் (மா.மு.சா. 328) கிமீ.4/8-ல் ரூ.7.25 கோடி மதிப்பில் வாணியார் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டுதல்.

#### *2.21.1.2. நடைபெற்று வரும் பணிகள்*

1. தஞ்சாவூர் மாவட்டம் திருவானைக்காவல் சாலை மற்றும் கல்லணை சாலையை இணைக்கும் வகையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ரூ.61.02 கோடி மதிப்பில் உயர்மட்ட பாலம் கட்டுதல்.
2. புதுக்கோட்டை மாவட்டம் சித்திராம்பூர் அருகே பாம்பாற்றின் குறுக்கே ரூ.18.82 கோடி மதிப்பில் அணுகுசாலையுடன் கூடிய உயர்மட்ட பாலம் கட்டுதல்.

### *2.21.2. நகரும் படிக்கட்டுடன் கூடிய மூன்று நடைமேம்பாலங்கள் கட்டுதல்*

கீழ்காணும் 2 நடைபாதை மேம்பாலங்களுக்கு ரூ.18.81 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு வடிவமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

அவையாவன,

1. கோயம்புத்தூர் இரயில் நிலையம் அருகில் நடைபாதை மேம்பாலம் அமைத்தல்.
2. கோயம்புத்தூர் நஞ்சுண்டாபுரம் சந்திப்பு அருகில் நடைபாதை மேம்பாலம் அமைத்தல்.

## 2.22. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள்

2018-19-ம் நிதியாண்டில் 15 மாவட்டங்களில் 20 பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.6.32 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றன.

## 2.23. நில எடுப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகள்

2018-19ம் நிதியாண்டில் 4 மாவட்டங்களில் 6 பணிகளுக்கு நில எடுப்பிற்காக ரூ.36.83 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 2.24. சென்னை வெளிவட்டச் சாலை

### *2.24.1. சென்னை வெளிவட்டச் சாலை - கட்டம் I*

இத்திட்டச் சாலையானது வடிவமைத்தல், கட்டுதல், நிதி ஆதாரம், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் வண்டலூரில் (தே.நெ.45) தொடங்கி நெமிலிச்சேரி (தே.நெ.205) வரையில் நசரத்பேட்டை (தே.நெ.4) வழியாக 29.65 கி.மீ. நீளத்தில் ரூ.1081.40 கோடி செலவில் சாலை அமைக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டத்தில் மண்ணிவாக்கம் முதல் நெமிலிச்சேரி வரையில் பெரும்பாலான பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது. மீதமுள்ள பகுதியில் நீதிமன்ற தடையாணைகள் விரைவில் நீக்கப்பட்டவுடன் பணிகள் முடிக்கப்படும்.

### *2.24.2. சென்னை வெளிவட்டச் சாலை - கட்டம் II*

சென்னை வெளிவட்டச் சாலை, இரண்டாம் கட்டம் நெமிலிச்சேரி (தே.நெ.205) முதல் மீஞ்சூர் (தே.நெ. 5 குறுக்கிடும் இடத்தில் ) வரையில் 30.50 கி.மீ. நீளம் கொண்ட ஆறு வழித்தடச் சாலையாக ரூ. 1075 கோடி மதிப்பீட்டில் வடிவமைத்தல், கட்டுதல், நிதி ஆதாரம், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான வழக்கின் காரணமாக நிலுவையில் உள்ள 0.50 கி.மீ. நீளமுள்ள பகுதி நீங்கலாக ஏனைய பணிகள் முடிவுற்றன. நிலுவையில் உள்ள வழக்கை விரைவில் முடிவுக்கு கொண்டு வந்து எஞ்சியுள்ள இப்பணி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

## 2.25. சென்னை எல்லைச் சாலை கட்டம்-1 (வடக்கு துறைமுக இணைப்புச் சாலை)

சென்னை எண்ணூர் துறைமுகம் முதல் மாமல்லபுரம் வரை சாலை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த புதிய சாலையின் ஐந்து கட்டங்களில் முதற்கட்டமாக எண்ணூர் துறைமுகத்தின் வடக்கு நுழைவு வாயிலையும், தே.நெ. 5-ல் உள்ள தச்சூரையும் இணைப்பதுடன், கூடுதலாக சென்னை வெளிவட்டச் சாலையையும் இணைக்கும் இணைப்புச் சாலையும் உள்ளடக்கியதாகும். இதன் மொத்த நீளம் 24.85 கி.மீ. ஆகும்.

இது ஒரு பசுமை வழிச்சாலையாக அமைய உள்ளது. இதற்காக அரசு ரூ.2673.42 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும் இச்சாலை கனரக தொழிற்தடங்கள்,

எண்ணூர் துறைமுகம் மற்றும் இடைப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகள் ஆகியவற்றை இணைத்து போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்யும்.

இந்த முதற்கட்ட சாலை திட்டத்திற்காக திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டத்தில் உள்ள 15 கிராமங்களில் நில எடுப்பு மேற்கொள்ள ரூ.951 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் பேரில் நில எடுப்பு பணிகள் துவக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியத்தின் கடன் உதவியில் செயல்படுத்தப்பட உள்ளது. சாலைக் கட்டுமானம் 2020-ல் தொடங்கி 2023-ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.26. கிழக்கு கடற்கரைச் சாலையில் கல்பாக்கம் அருகே இளையனார்குப்பத்தில் புதிய நான்கு வழித்தட உயர்மட்டப் பாலம் கட்டுதல்

2017-18-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி கிழக்கு கடற்கரை சாலை கி.மீ.69/300-ல் இளையனார்குப்பத்தில் புதிய நான்கு வழித்தட உயர்மட்டப் பாலம் ரூ.23.78 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வருகிறது.

## 2.27. வடசென்னை அனல்மின் நிலைய சாலை மற்றும் காமராசர் துறைமுகம் சாலை ஆகியவற்றை அகலப்படுத்தி கான்கிரீட் சாலை அமைத்தல்

காமராசர் துறைமுகம் நிறுவனத்தின் வேண்டுகோளுக்கிணங்க, வடசென்னை அனல் மின் நிலைய சாலை மற்றும் காமராசர் துறைமுக நுழைவு வாயில் வரையிலான சாலை ஆகியவற்றை நான்கு வழிப்பாதையாக விரிவுபடுத்தி கான்கிரீட் சாலையினை வைப்புத் தொகை அடிப்படையில் செயல்படுத்த திட்டமிடப்பட்டது. இவ்விரு சாலைகளின் ஒட்டு மொத்த நீளம் 7.2 கி.மீ. ஆகும். இப்பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.195 கோடியாகும்.

காமராசர் துறைமுகம் சாலையை நான்கு வழிப்பாதையாக விரிவுபடுத்தி கான்கிரீட் சாலையாக அமைக்கும் பணி முதற்கட்டமாக செயலாக்கப்பட்டு தற்போது பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. விரைவில் பணிகள் முடிவடையும். 2.8 கி.மீ. நீளமுள்ள வட சென்னை அனல்மின் நிலைய சாலை மேம்பாடு நடப்பாண்டில் எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

## 2.28. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள சிங்கடிவாக்கம் பகுதியில் அமைந்துள்ள சோஜிட்ஸ் மதர்ஸன் (Sojitz Motherson) தொழிற்பூங்காவினை தேசிய நெடுஞ்சாலை எண் 4 உடன் இணைக்கும் சாலையினை மேம்படுத்துதல்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள சிங்கடிவாக்கம் பகுதியில் அமைந்துள்ள சோஜிட்ஸ் மதர்ஸன் தொழிற் பூங்காவிற்கு செல்லும் 2.80 கி.மீ. நீளச்சாலையினை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி கான்கிரீட் சாலையாக அமைக்க ரூ.24 கோடியில் தமிழ்நாடு முதலீடு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 2.29. இராஜீவ் காந்தி தகவல் தொழில்நுட்ப விரைவுச்சாலை

### *2.29.1. கட்டம்-1*

இராஜீவ்காந்தி தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை கட்டம்-1-ன் கீழ் சென்னை அடையாறு மத்திய கைலாஷ் முதல் சிறுசேரி வரையிலான 20.10 கி.மீ. நீளத்திற்கு இருபுறத்திலும் மூன்று வழிப்பாதையாக அமைக்கப்பட்டுள்ளது. சோழிங்கநல்லூர் மற்றும் கிழக்கு கடற்கரை சாலையினை இணைக்கும் 2.15 கி.மீ. நீள இணைப்புச் சாலையும் இத்திட்டத்தின் மூலம் நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தப்பட்டுள்ளது. இச்சாலை சுங்கச் சாலையாக பராமரிக்கப்படுகிறது.

### *2.29.2. கட்டம்-2*

இராஜீவ் காந்தி தகவல் தொழில்நுட்ப விரைவு சாலையினை இரண்டாம் கட்டமாக சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரை 25 கி.மீ. நீளத்திற்கு திருப்போரூர் மற்றும் கேளம்பாக்கம் பகுதிகளில் இரண்டு புறவழிச்சாலைகளுடன், ஆறு வழிப்பாதையாக பொது-தனியார் பங்களிப்பு முறையில் விரிவுபடுத்த அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆறுவழிப்பாதையாக விரிவுபடுத்த சிறுசேரி முதல் பூஞ்சேரி வரை 13 கிராமங்களில் 60 மீ. அகலத்திற்கு 88.62 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்த ரூ.465.13 கோடி அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுவரை 9 கிராமங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்டு மீதமுள்ள கிராமங்களில் நிலம் கையகப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரை மற்றும் கேளம்பாக்கம், திருப்போரூர் புறவழிச்சாலை பணிகளுக்கு திட்ட மதிப்பீடு ரூ.573.99 கோடிக்கு தயாரிக்கப்பட்டது. தற்போது, முதற்கட்டமாக கேளம்பாக்கம் புறவழிச்சாலை 4.675 கி.மீ. நீளம், திருப்போரூர் புறவழிச்சாலை 7.45 கி.மீ. நீளத்திற்கு அமைக்க தமிழ்நாடு முதலீட்டு வளர்ச்சித் திட்டம்-II கீழ், ரூ.243.70 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

## 2.30. சிறுசேரியில் பல்லடுக்கு வாகன நிறுத்தம்

சென்னை - தகவல் தொழில்நுட்ப விரைவு சாலையில் உள்ள சிறுசேரியில், பல்லடுக்கு வாகன நிறுத்தம் அமைக்கும் திட்டம் பொது-தனியார் பங்களிப்பு முறையில் ரூ.200 கோடி திட்ட மதிப்பில் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது.

இப்பணிக்கு, விரிவான திட்ட சாத்திய கூறு அறிக்கை ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுவிட்டது. எனினும், இதன் கட்டுமானம் எடுத்துக் கொள்ளப்பட உள்ள இடத்தில் சென்னை மெட்ரோ இரயில் கட்டம்-II-ன் கட்டுமானமும் திட்டமிடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டதால், மெட்ரோ இரயில் கட்டுமானத்தின் தாக்கத்தினை கணக்கில்

எடுத்துக் கொண்டு சாத்தியக்கூறு அறிக்கையினை திருத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருத்திய அறிக்கை இறுதி செய்யப்பட்டபின் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 2.31. உயர்மட்டச் சாலை

தரமணி முதல் சிறுசேரி வரை முதல் கட்டமாகவும், சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரை இரண்டாவது கட்டமாகவும் மொத்தம் 45 கி.மீ. நீளத்திற்கு உயர்மட்ட சாலைத் தடம் அமைக்கும் திட்டத்திற்காக, ரூ.5 கோடி செலவில் ஆலோசகர்களைக் கொண்டு “விரிவான திட்ட அறிக்கை ” தயாரிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக தரமணி முதல் சிறுசேரி வரை உயர்மட்ட சாலை அமைக்கும் பணிக்கான திட்ட அறிக்கை இறுதி செய்யப்பட்டுள்ளது.

இதே சாலையில் மெட்ரோ இரயில் சேவை கட்டம்-II அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதால் இரு பணிகளையும் செயல்படுத்தும் வகையில் திட்டங்களை ஒருங்கிணைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

உயர்மட்ட சாலையின் கட்டுமானத்தினை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியத்தின் கடன் உதவியில் செயல்படுத்தும் வகையில் முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. பூர்வாங்க திட்ட அறிக்கையானது, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்திடம், வெளி நிறுவன நிதி கோரும் பிரேரணைகள் அனுப்பப்பட்டுள்ளது.

### 2.32. ஒரகடம் தொழிற் பூங்கா சாலை கட்டமைப்பு திட்டம்

காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடம் தொழிற் பூங்காவில் சாலை வசதிகளை மேம்படுத்த முடிவு செய்யப்பட்டு, ஒரகடம் தொழிற் பூங்கா தொடர் சாலை திட்டம் 2005-06-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதன் விவரம் கீழ்கண்டவாறு:

**அட்டவணை 13: திட்டத்தின் பல்வேறு கட்டங்கள்**

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | கட்டம் | ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆண்டு | ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை | திருத்திய நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| 1 | I | 2005-06 | 30000 | 61282 | 98 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 2 | II | 2011-12 | 8665 | 10866 | 95 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன. |

| வ. எண் | கட்டம் | ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆண்டு | ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை | திருத்திய நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| 3 | III | 2015-16 | 11500 | - | 98 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன - நில எடுப்பு பணி உள்ளடக்கியது. |
| 4 | IV | 2016-17 | 18981 | - | 90 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன - நில எடுப்பு பணி உள்ளடக்கியது |
| 5 | V | 2017-18 | 18009 | - | பணிகள் நடைபெற்று வருகின்றன. |

***2.32.1. கட்டம் - I***

சிங்கபெருமாள்கோயில் - திருப்பெரும்புதூர் சாலை கி.மீ 24 மா.நெ 57ன் பகுதி மற்றும் வண்டலூர் - வாலாஜாபாத் சாலை கி.மீ. 33.40 - மா.நெ 48ன் பகுதி ஆகியவற்றை ரூ.300 கோடி மதிப்பில் அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி முதற்கட்டமாக 57.40 கி.மீ. நீளத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவற்றில் ஒரகடம் சாலை சந்திப்பில் பல்வழிச்சாலை மேம்பாலம் கட்டும் பணியும் உள்ளடங்கும். இத்திட்டத்திற்கு ரூ.612.82 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. நில எடுப்பு பகுதி நீங்கலாக பெரும்பாலான பகுதிகளில் பணிகள் முடிவுற்றுள்ளது.

முதற்கட்ட பணியில் நில எடுப்பிற்கான செலவினம் ரூ.255.10 கோடி உட்பட மொத்தம் ரூ.562.13 கோடி செலவிடப்பட்டுள்ளது.

***2.32.2. கட்டம் - II***

சிங்கபெருமாள்கோயில் - திருப்பெரும்புதூர் சாலையில் கி.மீ. 12/6 முதல் 24/6 வரை உள்ள நான்கு வழிச்சாலையை ஆறு வழிச்சாலையாக மேம்படுத்தும் பணி 2011-12 ஆம் ஆண்டில் ரூ.86.65 கோடி மதிப்பீட்டில் எடுத்து கொள்ளப்பட்டது. இத்திட்டமானது ரூ.108.66 கோடி திருத்திய மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, மொத்தமுள்ள 12 கி.மீ. நீளச்சாலையில் 11.20 கி.மீ. நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 0.80 கி.மீ. நீளத்தில், நில எடுப்பினால் தாமதப்பட்ட பணிகள் நில எடுப்பு முடிவுற்ற பின் எடுத்துக்கொள்ளப்படும்.

இதுவரை ரூ.96.41 கோடி செலவிடப்பட்டுள்ளது.

*2.32.3. கட்டம் - III*

சிங்கபெருமாள்கோயில் - திருப்பெரும்புதூர் சாலையில் கி.மீ. 0/6 முதல் 12/6 வரை நான்கு வழிச்சாலையை ஆறு வழிச்சாலையாக மேம்படுத்தும் பணி 2014-15-ல் ரூ.115 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மொத்தமுள்ள 12 கி.மீ. நீளச்சாலையில், 11.70 கி.மீ. நீளச்சாலைப் பணி முடிவுற்றது. மீதமுள்ள பணி நடைபெற்று வருகிறது.

இதுவரை ரூ.108 கோடி செலவிடப்பட்டுள்ளது.

*2.32.4. கட்டம் - IV*

வண்டலூர் - வாலாஜாபாத் சாலையினை கி.மீ. 30/4 - 47/0 வரை நான்கு வழிச்சாலையிலிருந்து ஆறு வழிச்சாலையாக மேம்படுத்துதல் மற்றும் படப்பை புறவழிச்சாலை அமைப்பதற்கான நில எடுப்பு பணி உட்பட 2015-16-ல், ரூ.189.81 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, 90 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. படப்பை பகுதிக்கு நில எடுப்பு தீர்ப்பாணை பகிரப்பட்டுள்ளது. மீதமுள்ள பணி நடைபெற்று வருகிறது.

இதுவரை ரூ.140 கோடி செலவிடப்பட்டுள்ளது.

*2.32.5. கட்டம் - V*

வண்டலூர் - வாலாஜாபாத் சாலை கி.மீ 47/0 - 63/80 (16.80 கி.மீ.) வரை நான்கு வழிச் சாலையிலிருந்து ஆறு வழிச்சாலையாக மேம்படுத்தும் பணி 2017-18-ல், ரூ.180.09 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதுவரை ரூ.48 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**2.33. மதுரை சுற்றுச் சாலையை நான்கு வழித்தடமாக அமைத்தல்**

மதுரை சுற்றுச் சாலை கி.மீ. 0/0 முதல் 27/2 வரை இரு வழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்த 2015-16-ல் ரூ.213.69 கோடிக்கு கட்டுதல், இயக்குதல் மற்றும் திரும்ப ஒப்படைத்தல் - சுங்கம் மூலம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. திட்டச் செலவில் ரூ.80 கோடி இடைவெளி நிதியாக மாநில அரசால் வழங்கப்படுகிறது. விரகனூர் மற்றும் கப்பலூர் அருகில் கூடுதல் இருவழி கொண்ட இரண்டு இரயில்வே மேம்பாலங்களும் மற்றும் வைகை ஆற்றின் குறுக்கே ஒரு உயர் மட்ட ஆற்று பாலம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த ஒப்பந்த உடன்படிக்கை இரண்டு வருட கட்டுமான காலத்தையும் உட்சேர்த்து இருபது வருட காலத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்பொழுது 90 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

மொத்தமுள்ள ரூ.80 கோடி அரசு இடைவெளி நிதியில், இதுவரை ரூ.68.65 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

**2.34. ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2018-19ன் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் நிரந்தர வெள்ளத் தடுப்பு பணிகள்**

வண்டலூர் - வாலாஜாபாத் சாலையில் (மா.நெ-48) கி.மீ.33/6ல் அடையாறு ஆற்றின் குறுக்கே சிறுபாலப்பணி 2018–19-ல் சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.4.80 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, தற்போது நடைபெற்று வருகிறது.

இதுவரை ரூ.1.08 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**2.35. வைப்பு நிதி பணி**

ஒரகடத்தில் உள்ள டைம்லர் இந்தியா சரக்கு வாகன உற்பத்தி தொழிற்சாலையுடன் தமிழக அரசு மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி தொழிற்சாலையின் வடக்கு பகுதியிலிருந்து வண்டலூர் - வாலாஜாபாத் சாலையில் (மா.நெ-48) கி.மீ. 46/342 வரை அணுகு சாலை அமைப்பதற்கு ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் சிப்காட் வைப்பு நிதியின் கீழ் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது

இதுவரை ரூ.1 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**2.36. செய்த பணிகள்**

2018 – 19 ஆம் ஆண்டில் செய்த பணிகளின் மதிப்பு ரூ.97.90 கோடி ஆகும். மீதம் உள்ள பணிகள் நடைபெற்று வருகின்றது.

**2.37. TANII திட்டத்தின் கீழ் நடைபெறும் ஆராய்ச்சிப் பணிகள்**

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையமானது, கீழ்க்கண்ட ஆராய்ச்சிப் பணிகளை, தமிழ்நாடு மாநில புத்தாக்க முன்முயற்சி (TANII 2015-16) பணிகளுக்கான நிதியில், 2016-17-ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூ.283.70 இலட்சம் மதிப்பில் மேற்கொண்டுள்ளது.

1. விபத்துகளுக்கு எளிதில் இலக்காகும் சாலைப் பயனாளர்கள் குறித்த ஆய்வு.
2. உறுதிப்படுத்தப்பட்ட துணைத் தளத்தின் (Sub-base) மீது அமைக்கப்பட்ட தார்ச் சாலையின் தன்மை குறித்த ஆய்வு.

ரூ.260.71 இலட்சம் பணிக்காக செலவிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன ஆராய்ச்சிப் பணிகள் முடிவுற்று, உறுதிபடுத்தப்பட்டுள்ள துணை தளத்தின் மீதான தார்ச் சாலையின் தன்மை குறித்து தள கண்காணிப்புப் பணிக்கு 2018-19-ல் ரூ.11.00 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

2017-18-ல் TANII நிதியின் கீழ் பின்வரும் ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**அட்டவணை 14: திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டு விவரம்**

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நிதி ஒதுக்கீடு | | | | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| | | 2017-18 | 2018-19 | 2019-20 | மொத்தம் | |
| 1 | சாலை அடித்தளத்தின் தாங்குதிறனை பாறைத் துகள்களைச் சேர்த்து அதிகரிப்பது குறித்த கற்றறிதல். | 5.00 | 0.00 | 0.00 | 5.00 | பணி முடிவுற்றது. |
| 2 | வட்டச் சோதனை தடத்தின் உதவியுடன் நீண்ட காலம் தாங்கக் கூடிய சாலைக் கட்டுமானத்திற்கான தொழில்நுட்பம் குறித்த ஆய்வு. | 195.00 | 5.00 | 0.00 | 200.00 | பணி நடைபெற்று வருகிறது. |
| 3 | பாலத்தின் செயல்திறனை கருவிகள் மூலம் கண்காணித்தல். | 55.00 | 5.00 | 5.00 | 65.00 | பணி நடைபெற்று வருகிறது. |
| **மொத்தம்** | | **255.00** | **10.00** | **5.00** | **270.00** | |

இதுவரை ரூ.171.48 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2018-19-ல் TANII நிதியின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூ.4.00 இலட்சம் மதிப்பிலான, நிலக்கீல் கலவையில் நுண்ணிய களிமண்ணின் தாக்கம் குறித்த ஆய்வு நடைபெற்று வருகிறது.

மேற்சொன்ன ஆராய்ச்சிப் பணிகளின் முடிவுகள் களத்தில் நடைமுறைபடுத்தப்படின், சாலை மற்றும் பாலங்களின் செயல்திறன் மற்றும் நீடித்த ஆயுட்காலத்தினை மேம்படுத்தும்.

**2.38. வடிவமைப்பு முடிக்கப்பட்ட பணிகள்**

***2.38.1. முடிக்கப்பட்ட பணிகள் 2018 – 19***

மொத்தமாக 86 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதில் இருப்புப் பாதை கடவுகளில் மேம்பாலம் / கீழ்பாலம் மற்றும் ஆற்றுப்பாலம் / பல்வழிச் சாலை மேம்பாலப் பணிகளுக்கான

வடிவமைப்புகள் மற்றும் வரைபடங்கள் தயாரிக்கும் பணிகள் மற்றும் திருத்திய / மாற்று வடிவமைப்புகள் தயாரித்து அளிக்கும் பணிகளும் அடங்கும்.

### *2.38.2. நடப்பாண்டில் திட்டமிடப்பட்டுள்ள பணிகள் மற்றும் 2019 -20ல் எதிர்நோக்கும் பணிகள்*

நடப்பாண்டில், 60 பாலங்களின் வடிவமைப்பு பணிகள் பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில், 22 இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் / வரையறுக்கப்பட்ட கீழ்பாலங்கள், 27 ஆற்றுப் பாலங்கள், ஆகியவற்றின் வடிவமைப்புகள், வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கும் பணிகளும், ஆலோசகர்கள் மூலம் தயாரிக்கப்பட்ட 1 பல்வழிச் சாலை மேம்பாலம், 3 இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள், 4 ஆற்றுப் பாலங்கள், 2 மேம்பாலங்கள், 1 நகரும் மின் படிக்கட்டுடன் கூடிய மேம்பாலம், ஆகிய பாலப் பணிகளுக்கான வடிவமைப்பு மற்றும் வரைபடம் சரிபார்க்கும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இவை தவிர 2019-20ஆம் நிதியாண்டில் ஒப்புதல் அளிக்கப்படவுள்ள பணிகள் இவ்வலகின் மூலம் எடுத்துக் கொள்ளப்படும்.

### 2.39. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்

தமிழகத்திலுள்ள அதிக வாகன நெருக்கடி மிகுந்த சாலைகளின் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டப்பணிகளை மேற்கொள்வதற்காக உலக வங்கியிடமிருந்து 300 மில்லியன் அமெரிக்க டாலர் கடன் பெற வழிவகை செய்யும் கடன் மற்றும் திட்ட ஒப்பந்தங்கள் உலக வங்கியுடன் கையொப்பமிடப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் சாலை மேம்படுத்துதல், சாலை பராமரித்தல், சாலைப் பாதுகாப்பு மற்றும் நிறுவன செயல்திறன் மேம்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### *2.39.1. பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் முறையில் சாலை மேம்பாடு மற்றும் பராமரித்தல்*

பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமானம் வகை ஒப்பந்தம் மூலம் 427.66 கி.மீ நீளமுள்ள போக்குவரத்து செறிவு மிகுந்த மாநில சாலைகளை 10 தொகுப்புகளாக கடின தளப் புருவங்களுடன் கூடிய இருவழிச் சாலையாக ரூ.1704.91 கோடி மதிப்பில் தரம் உயர்த்த ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த 10 தொகுப்புகளில் 9 தொகுப்புகள் முறையே இபிசி 01, 02, 03, 05, 06, 07, 08, 09 மற்றும் 10 கிட்டத்தட்ட முடிவடைந்துள்ளன. மீதமுள்ள இபிசி 04 பணிக்கான எஞ்சிய பணிகளை முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### *2.39.2. வெளித்திறன் மற்றும் செயல்பாட்டு அடிப்படையிலான சாலை பராமரிப்பு ஒப்பந்தப்பணிகள்*

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-I-இன் மூலம் மேம்பாடு செய்யப்பட்டுள்ள ஆற்காடு முதல் திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரையிலான 597 கி.மீ நீளமுள்ள சாலைகள் வெளித்திறன் மற்றும் செயல்பாடு அடிப்படையில் இரு தொகுப்புகளாக சாலை பராமரிப்பின் கீழ் ரூ.220 கோடியில் 5 வருட காலத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டன. ரூ.170.062 கோடி மதிப்பில் மூன்று ஆண்டு பராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டு நான்காம் ஆண்டு பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### *2.39.3. பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) முறையில் மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல்*

பொது மற்றும் தனியார் பங்களிப்பு முறையில் மாற்றியமைக்கப்பட்ட ஈவு ஒப்பந்த முறை மூலம் முக்கிய சாலைக் கட்டமைப்புகளை நான்கு வழிச் சாலைகளாக அகலப்படுத்தி, தரம் உயர்த்த திட்டமிடப்பட்டு. 70.20 கி.மீ. நீளமுள்ள பிபிபி 02 க்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. 30.60 கி.மீ. நீளமுள்ள பிபிபி 01 தொகுப்பு பணி மற்றும் 45.64 கி.மீ. நீளமுள்ள பிபிபி 03 பணிகளை தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### *2.39.4. ஆலோசகர்கள் நியமனம்*

மேற்கண்ட பணிகளை மேற்பார்வையிட மேற்பார்வை ஆலோசகர்கள், முறையே இபிசி 1 முதல் இபிசி 10 தொகுப்பிற்கு மூன்று கண்காணிப்பு ஆலோசகர்கள், ஒபிஆர்சி 1 மற்றும் 2-க்கு ஒரு கண்காணிப்பு ஆலோசகர், ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். நிலம் கையகப்படுத்தும் பணியினை (நி.எ) மேற்கொள்ள ஒரு ஆலோசகரும், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பணியினை மேற்கொள்ள ஒரு ஆலோசகரும் நியமிக்கப்பட்டு இபிசி மற்றும் பிபிபி சாலை தொகுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான ஆலோசகர்கள் நியமனம் / ஆலோசனை சேவை, மூன்றாம் தரப்பு தணிக்கை ஆலோசனை, முன் இறுதி கட்டணம் மற்றும் திட்ட செலவுகள் ஆகியவற்றை மேற்கொள்ள ரூ.132.71 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. பிபிபி 02 பணிகளை கண்காணிக்க ஒரு தற்சார்பு பொறியாளர் (Independent Engineer) நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், இரண்டு பொது மற்றும் தனியார் பங்களிப்பு பணிகளை கண்காணிக்க தற்சார்பு பொறியாளரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### *2.39.5. விரிவான திட்ட அறிக்கைக்காக ஆலோசகர்கள் நியமன முன்மொழிதல்*

நெடுஞ்சாலைத்துறையின் சென்னை-கன்னியாகுமரி தொழிற்தட மண்டலத்தின் உள் மற்றும் வெளிப்புறம் அமைந்துள்ள 3319 கி.மீ. நீளமுள்ள சாலைகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்காக தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் மூலம் ரூ.132.76 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, இப்பணி தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 1181.635 கி.மீ. நீளமுள்ள சாலைகளுக்கு 5 தொகுப்புகளாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்காக முன்மொழிவு கோரிக்கை தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆலோசகர்களுக்கு மார்ச் 2019-ல் வழங்கப்பட்டுள்ளது.

### *2.39.6. துறைத் திறன் மேம்பாடு*

வளர்ந்து வரும் நெடுஞ்சாலை துறையின் சவால்களை எதிர்கொள்ளும் வகையில், பின்வரும் பணிகள் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு துறைத் திறன் மேம்பாடு சாலை பாதுகாப்பு குழுமத்தின் மூலம் செயலாக்கப்பட்டு வருகிறது.

- சாலை பயனாளர்களின் மனநிறைவு குறித்து ஆய்வு செய்யும் பணியானது மேம்படுத்தப்பட்ட சாலைகள் மற்றும் இத்திட்டத்தில் அல்லாத 4 சாலைகளில் நடத்தப்பட்டது.
- 250 பொறியாளர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட பிற துறைகளின் அலுவலர்களுக்கு அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனம் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.
- தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் 2001-ல் திருத்தங்கள் செய்யும் பணிக்கு ஆலோசகர் நியமிக்கப்பட்டு, வரைவு திருத்தங்கள் முன்னேற்ற நிலையில் உள்ளன.
- நெடுஞ்சாலைத்துறையின் கையேடுகளை மேம்படுத்தவும், துறையின் செயல்பாடுகளை ஆய்வு செய்து மேம்படுத்தவும் ஆலோசகர் நியமிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டு வரைவு அறிக்கைகள் ஆலோசகர் மூலம் தயாரிக்கப்பட்டு வருகிறது.
- துறையின் பயிற்சிக்கான தேவைகளை கண்டறிந்து முறையான பயிற்சிக்கான திட்டம், கையேடு கொள்கை மற்றும் பயிற்சி மையத்திற்கான திட்டம் தயாரிக்கவும் ஆலோசகர் நியமிக்கப்பட்டு வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.
- துறையில் தற்போதுள்ள தகவல் தொழில்நுட்ப அமைப்புகளை ஆய்வு செய்து அதனை மேம்படுத்துவதற்கான ஆலோசகர் நியமிக்கப்பட்டு, வரைவு திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

### *2.39.7. சாலை பாதுகாப்பு*

சாலைப்பயனாளர்களின் பாதுகாப்பை மேம்படுத்த கீழ்கண்ட பணிகள் துறைத் திறன் மேம்பாடு சாலை பாதுகாப்பு குழுமம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- சாலை பாதுகாப்பு கொள்கைகளை உருவாக்கவும் மற்றும் சாலை பாதுகாப்பு மேலாண்மை குழுவால் மேற்கொள்ளப்படும் பல்வேறு சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருக்க சாலை பாதுகாப்பு மேலாண்மை ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளனர். காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள சுமார் 1400 கி.மீ. நீளமுள்ள சாலைகளுக்கு சாலை பாதுகாப்பு தணிக்கை மேற்கொள்ளப்பட்டது மேலும் தற்பொழுது 500 கி.மீ. நீளத்திற்கு சர்வதேச சாலை மதிப்பீட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கிழக்கு கடற்கரை சாலையில் பொருத்தப்படவுள்ள தானியங்கி வேக கட்டுப்பாடு அமலாக்கம் மற்றும் போக்குவரத்து மேலாண்மை அமைப்புக்கான கொள்முதல் பணி தற்பொழுது முன்னேற்ற நிலையில் உள்ளது.
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மருத்துவமனையில் நிறுவப்படவுள்ள அவசர விபத்து சிறப்பு சிகிச்சை மையத்திற்கான கொள்முதல் பணி தற்பொழுது முன்னேற்ற நிலையில் உள்ளது.
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வை உண்டாக்க ஆலோசகர் நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு முன்னேற்ற நிலையில் உள்ளது.
- பல்வேறு துறையைச்சார்ந்த 19 அதிகாரிகளுக்கு புது தில்லியில் உள்ள சாலை போக்குவரத்து மற்றும் கல்வி நிறுவனம் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

### *2.39.8. நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மறுவாழ்வு மறு குடியமர்வு*

நியாயமான இழப்பீடு பெறும் உரிமை மற்றும் வெளிப்படையான நிலம் எடுப்பு, மறுவாழ்வு, மீள்குடியேற்ற சட்டம் 2013-ன் படியும், உலக வங்கியின் நில எடுப்பு மற்றும் திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான செயல் திட்ட விதிமுறைகளின் வழிகாட்டுதலின் படி "மீள்குடியேற்ற கொள்கை கட்டமைப்பு" தயார் செய்யப்பட்டு அரசு ஒப்புதல் பெறப்பட்டு செயல்பாட்டில் உள்ளது மற்றும் இதுவரையில் நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மறுவாழ்வு மறுகுடியமர்வுக்காக ரூ.335.162 கோடி செலவிடப்பட்டுள்ளது.

# II சிறு துறைமுகங்கள் அலகு

## 3. தமிழ்நாடு கடல்சார் வாரியம்

தமிழ்நாடு, சுமார் 1076 கிலோமீட்டர் நீளக் கடற்கரையைக் கொண்டுள்ளது. இந்த கடற்கரையில், 1963 ஆம் வருட பெருந்துறைமுகக் கழகச் சட்டத்தின்படி அறிவிக்கை செய்யப்பட்டுள்ள எண்ணூர், சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய மூன்று பெருந்துறைமுகங்களும், 1908 ஆம் வருட இந்திய துறைமுக சட்டத்தின்படி அறிவிக்கை செய்யப்பட்டுள்ள 18 சிறு துறைமுகங்களும் அமைந்துள்ளன.

கடலூர், நாகப்பட்டினம் துறைமுகங்களில் சரக்கு போக்குவரத்தும், பாம்பன் துறைமுகத்தில் சிறு கலன்கள் கால்வாயை கடப்பதற்கு வழிகாட்டும் பணியும், கன்னியாகுமரி மற்றும் இராமேசுவரம் துறைமுகங்களில் பயணியர் படகு போக்குவரத்தும் நடைபெற்று வருகிறது.

### 3.1. சிறு துறைமுகங்களில் கையாளப்படும் சரக்குகளின் விபரம்

**அட்டவணை 15 : சிறு துறைமுகங்களில் கையாளப்படும் சரக்குகள்**

(மெட்ரிக் டன்களில்)

| வ. எண் | துறைமுகத்தின் பெயர்கள் | ஏற்றுமதி / இறக்குமதி | கப்பல்களின் எண்ணிக்கை | சரக்குகள் | சரக்கின் அளவு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | எண்ணூர் சிறு துறைமுகம் | இறக்குமதி | 7 | திரவ அமோனியா | 48,000 | **48,000** |
| 2. | காட்டுப்பள்ளி துறைமுகம் | இறக்குமதி | 12 | எஃகு/இரும்பு | 83,173 | **2,62,889** |
| | | | 2 | இயந்திரங்கள் | 1,092 | |
| | | | 1 | மின்சாதன பொருட்கள் | 439 | |
| | | | 5 | டீசல் | 949 | |
| | | | 2 | ஜிப்சம் | 1,09,430 | |
| | | | - | லைம் ஸ்டோன் | 12,000 | |
| | | | 1 | மணல் | 55,806 | |
| | | ஏற்றுமதி | 7 | இயந்திரங்கள் | 17,613 | **32,415** |
| | | | 2 | கிரானைட் | 14,330 | |
| | | | 1 | இரும்பு | 455 | |
| | | | 1 | டீசல் | 17 | |
| 3. | கடலூர் துறைமுகம் | இறக்குமதி | 37 | வினைல் குளோரைடு மோனோமர் | 2,80,540 | **2,80,554** |
| | | | - | பல்வகை சரக்குகள் | 2 | |
| | | | - | இயந்திரங்கள் | 12 | |

| வ. எண் | துறைமுகத்தின் பெயர்கள் | ஏற்றுமதி / இறக்குமதி | கப்பல்களின் எண்ணிக்கை | சரக்குகள் | சரக்கின் அளவு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | ஏற்றுமதி | - | பெட்ரோலியப் பொருட்கள் | 223 | 2,224 |
| | | | - | பல்வகை சரக்குகள் | 1,951 | |
| | | | - | இயந்திரங்கள் | 50 | |
| 4. | நாகப்பட்டினம் துறைமுகம் | இறக்குமதி | 3 | கச்சா சமையல் எண்ணெய் | 25,400 | 43,093 |
| | | | 6 | சுத்திகரிக்கப்பட்ட சமையல் எண்ணெய் | 17,693 | |
| | | ஏற்றுமதி | 15 | நாப்தா | 1,31,483 | 2,91,303 |
| | | | 13 | டீசல் | 1,58,351 | |
| | | | - | பல்வகை சரக்குகள் | 1,469 | |
| 5. | திருக்கடையூர் துறைமுகம் | இறக்குமதி | - | இயற்கை எரிவாயு | 377 | 2,416 |
| | | | | கச்சா எண்ணெய் | 2,039 | |
| **மொத்தம்** | | **இறக்குமதி** | **69** | | **6,36,952** | **9,62,894** |
| | | **ஏற்றுமதி** | **39** | | **3,25,942** | |
| **பெரு மொத்தம்** | | | **115** | | **9,62,894** | **9,62,894** |

### அட்டவணை 16: சிறு துறைமுகங்களில் கையாளப்படும் சரக்குகள்

(எண்களில்)

| வ. எண் | துறைமுகத்தின் பெயர் | ஏற்றுமதி / இறக்குமதி | கப்பல்களின் எண்ணிக்கை | சரக்குகள் / பெட்டகங்கள் | சரக்கின் அளவு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | காட்டுப்பள்ளி துறைமுகம் | இறக்குமதி | 6 | கனரக மோட்டார் வாகனங்கள் | 198 | 198 |
| | | ஏற்றுமதி | - | கனரக மோட்டார் வாகனங்கள் | 3 | 3 |
| | | இறக்குமதி | 343 | 20 அடி நிரப்பப்பட்டவை | 78,189 | 1,39,601 |
| | | | | 40 அடி நிரப்பப்பட்டவை | 51,729 | |
| | | | | 20 அடி வெற்றுப் பெட்டகங்கள் | 1,842 | |
| | | | | 40 அடி வெற்றுப் பெட்டகங்கள் | 7,841 | |
| | | ஏற்றுமதி | | 20 அடி நிரப்பப்பட்டவை | 93,181 | |
| | | | | 40 அடி நிரப்பப்பட்டவை | 90,293 | 2,72,191 |

| வ. எண் | துறைமுகத்தின் பெயர் | ஏற்றுமதி / இறக்குமதி | கப்பல்களின் எண்ணிக்கை | சரக்குகள் / பெட்டகங்கள் | சரக்கின் அளவு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | 20 அடி வெற்றுப் பெட்டகங்கள் | 60,191 | |
| | | | | 40 அடி வெற்றுப் பெட்டகங்கள் | 28,526 | |
| **மொத்தம்** | | **இறக்குமதி** | 349 | | **1,39,799** | **4,11,993** |
| | | **ஏற்றுமதி** | | | **2,72,194** | |
| **பெரு மொத்தம்** | | | 349 | | **4,11,993** | **4,11,993** |

### *3.1.1. பாம்பன் துறைமுகம்*

இத்துறைமுகம், மன்னார் வளைகுடா பகுதியில் பாம்பன் கால்வாயைக் கடந்து செல்லும் சிறு கலன்களுக்கு வழி காட்டும் பணியை செய்து வருகிறது. 2018-19 ஆம் ஆண்டில் 343 கலன்கள் இக்கால்வாயைக் கடந்து சென்றுள்ளன.

### *3.1.2. இராமேசுவரம் துறைமுகம்*

இராமேசுவரம் துறைமுகத்தில் அக்னி தீர்த்தக்கரையில் பயணிகள் படகுப் போக்குவரத்து நடத்தப்பட்டு, 2018-19 ஆம் ஆண்டில் 1,64,376 பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

### *3.1.3. கன்னியாகுமரி துறைமுகம்*

கடற்கரையிலிருந்து விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு, பயணிகள் படகுப் போக்குவரத்தினை, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் நடத்தி வருகின்றது. தமிழ்நாடு கடல்சார் வாரியம், இப்படகுப்பயணத்தை கண்காணிப்பதற்கான நிர்வாகச் செலவுக் கட்டணத்தை கழகத்திடமிருந்து வருவாயாகப் பெறுகிறது. 2018-19-ல் 20,08,574 பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

### *3.1.4. சரக்குப் போக்குவரத்து*

2018-19 ஆம் ஆண்டில் சிறுதுறைமுகங்கள் வாயிலாக 9,62,894 மெட்ரிக் டன் சரக்குகள், 4,11,792 சரக்குப் பெட்டகங்கள் மற்றும் 201 வாகனங்கள் ஆகியவை 464 கப்பல்கள் மூலம் கையாளப்பட்டுள்ளன.

## 4. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 11.04.1974 ஆம் நாள் நிறுவனங்கள் சட்டம் 1956-ன் படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குச் சொந்தமான

அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான மொத்த நிலக்கரியை ஏற்றி வருவதற்காக நிறுவப்பட்டது.

### 4.1. நிலக்கரி எடுத்து வருதல்

#### *4.1.1. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு நிலக்கரி எடுத்து வருதல்*

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குத் தேவையான நிலக்கரியை ஹால்டியா, பாரதீப், தாம்ரா மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய துறைமுகங்களிலிருந்து ஏற்றிக் கொண்டு வந்து எண்ணூர், காரைக்கால் மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களில் இறக்கப்படுகிறது.

#### *4.1.2. என்.டி.பி.சி. தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்திற்கு நிலக்கரி எடுத்து வருதல்*

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தேசிய அனல் மின் கழகம் ஆகியவற்றின் கூட்டு நிறுவனமான என்.டி.பி.சி தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தப்படி, வடசென்னை வல்லூரில் அமைந்துள்ள அந்நிறுவனத்தின் 500 மெகாவாட் திறன் படைத்த மூன்று அலகுகளுக்குத் தேவையான இந்திய நிலக்கரி முழுவதையும் பாரதீப் மற்றும் தாம்ரா ஆகிய துறைமுகங்களிலிருந்து எண்ணூர் துறைமுகத்திற்கு வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்கள் மூலமாக எடுத்து வரும் பணியினை மேற்கொண்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில், நிலக்கரி ஏற்றும் துறைமுகங்களுக்கு வந்து சேர்ந்த நிலக்கரி, நிறுவனத்தின் சொந்த மற்றும் வாடகைக் கப்பல்கள் மூலம் நிலக்கரி ஏற்றி வந்த விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை 17 : எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் விவரம்**

(இலட்சம் மெட்ரிக் டன்)

| வருடம் | நிலக்கரி ஏற்றும் துறை முகங்களில் வந்து சேர்ந்த நிலக்கரியின் அளவு | வாடகைக் கப்பல்கள் மூலம் எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் அளவு | சொந்தக் கப்பல்கள் மூலம் எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் அளவு | எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் மொத்த அளவு | சாதனையின் அளவு |
|---|---|---|---|---|---|
| 2016-17 | 171.86 | 135.02 | 34.35 | 169.37 | 98.55% |
| 2017-18 | 190.00 | 167.62 | 21.23 | 188.85 | 99.39% |
| 2018-19 | 210.06 | 197.84 | 7.18 | 205.02 | 97.60% |

## 4.2. செயல்திறன் மற்றும் நிதிநிலை

### *4.2.1. செயல்திறன்*

சொந்த கப்பல்கள் மற்றும் வாடகைக் கப்பல்களின் 2017-18 மற்றும் 2018-19 ஆம் ஆண்டுகளின் செயல்திறன் பின்வருமாறு:

**அட்டவணை 18 : கப்பல்களின் செயல்திறன்**

| | 2017-18 | 2018-19 |
|---|---|---|
| **சொந்தக் கப்பல்கள்** | | |
| கப்பல்களின் எண்ணிக்கை | 2 | 1 |
| பயண எண்ணிக்கை | 48 | 17 |
| எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் அளவு (இலட்சம் மெட்ரிக் டன்) | 21.23 | 7.18 |
| பயணம் ஒன்றுக்கு எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் சராசரி அளவு (மெட்ரிக் டன்) | 44229 | 42225 |
| **வாடகைக் கப்பல்கள்** | | |
| வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்களின் எண்ணிக்கை | 14 | 15 |
| பயண எண்ணிக்கை | 262 | 310 |
| எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் அளவு (இலட்சம் மெட்ரிக் டன்) | 167.62 | 197.84 |
| பயணம் ஒன்றுக்கு எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் சராசரி அளவு (மெட்ரிக் டன்) | 63977 | 63818 |
| **எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் மொத்த அளவு (இலட்சம் மெட்ரிக் டன்)** | **188.85** | **205.02** |

### *4.2.2. நிதி நிலை*

கடந்த மூன்று ஆண்டுகளில், கழகத்தின் மொத்த நிதி நிலை செயல்திறன் விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை 19 : நிதி நிலை விவரம்**

(ரூ.கோடியில்)

| வருடம் | மொத்த வருவாய் | நிகர இலாபம் |
|---|---|---|
| 2016-17 | 427.15 | 2.95 |
| 2017-18 | 521.63 | 1.12 |
| 2018-19* | 785.43* | 4.00* |

*எதிர்நோக்கப்பட்டவை

## 4.3. கன்னியாகுமரி படகுத்துறை

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகமானது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் என்.டி.பி.சி தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் ஆகியவற்றிற்குத் தேவையான நிலக்கரியை எடுத்து வரும் சீரியச் செயலோடு, குமரி முனையிலிருந்து அய்யன் திருவள்ளுவர் சிலை மற்றும், விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு படகுப் போக்குவரத்தினையும் நடத்தி வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான படகுத் துறையின் நிதி-நிலை மற்றும் செயல்திறன் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 20 : நிதிநிலை மற்றும் செயல்திறன் விவரம்**

| | 2017-18 | 2018-19 |
|---|---|---|
| இயக்கப்படும் படகுகளின் எண்ணிக்கை | 3 | 3 |
| பயணித்த பயணிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 21.67 | 19.93 |
| கட்டண வசூல் (ரூபாய் இலட்சத்தில்) | 979.11 | 1124.40 |
| இயக்க லாபம் (ரூபாய் இலட்சத்தில்) | 268.90 | 225.47* |

*எதிர்நோக்கப்பட்டவை

**எடப்பாடி கே. பழனிசாமி**
**முதலமைச்சர்**